
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

Eelanadu
ஈழநாடு
வார மலர்



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல. 285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல. 390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 273 | பக்கங்கள் : 16

# த. தே. கூட்டமைப்பிலிருந்து பிரிந்தோர் மீளவரவேண்டும்!

## தமிழ் அரசுக் கட்சி அழைப்பு

### பொதுத் தேர்தலில் கொழும்பிலும் போட்டியிடுவது குறித்து ஆராய்வு

- கோகுலன் -

வவுனியா, செப்ரெம்பர் 29

**தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்துசென்றவர்கள் மீண்டும் வந்து இணைய வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**



அத்துடன், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் குறிப்பாக கொழும்பில் போட்டியிடுவது தொடர்பிலும் அந்தக் கட்சி பரிசீலித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் 15

## 5 பேருக்கு 3 வருடங்களில் 27 கோடி செலவிட்ட அரசு!

கொழும்பு, செப். 29

நான்கு முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் ஒரு முன்னாள் ஜனாதிபதியின் மனைவிக்கும் 3 வருடங்களில் 27 கோடி ரூபாயை கொடுப்பனவாக அரசாங்கம் செலவிட்டுள்ளது.

சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகிய முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மனைவியான ஹேமா பிரேமதாஸ ஆகியோருக்கே 2022 முதல் 2024 வரையான காலப்பகுதியில் இந்தத் தொகை செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு 2022இல் 15

## தரம் 5 வினாத்தாள் கசிவு: விசாரணைக்கு 7 பேர் குழு!

கொழும்பு, செப். 29

தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள் கசிந்த சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக 7 பேர் கொண்ட சுயாதீன விசாரணைக் குழு அமைக்கப்படவுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரியவின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட் சையின் வினாத்தாள் முன்னரே கசிந்தது 15

## திருமலை, அம்பாறைக்கு தேர்தலில் விசேட கரிசனை!

- கோகுலன் -

வவுனியா, செப். 29

நவம்பரில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் விசேட கரிசனை செலுத்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முடிவு செய்துள்ளதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் திரு கோணமலை, அம்பாறை மாவட்டங்களில் 15

## கணவாய் பிடிக்க சென்றவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப். 25

கணவாய் பிடிப்பதற்கு கடலுக்கு சென்ற மீனவர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

நேற்று சனிக்கிழமை காக்கைதீவு கடல் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த கனகராசா சுரேஷ்குமார் (வயது 39) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார். 15

## அரசுக்கு சொந்தமான 4,000 வாகனங்கள் மாயம்!

கொழும்பு, செப். 29

சுகாதாரம், கல்வி , தபால் , நீர்ப்பாசனம் மற்றும் ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட அரச திணைக்களங்களின் சுமார் 4 ஆயிரம் வாகனங்கள் கடந்த தினங்களில் காணாமல் போயுள்ளன.

இது தொடர்பில் அரச வாகனங்கள் தொடர்பான விசேட கணக்காய்வை தேசிய கணக்காய்வு பணிமனை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளது.

விசாரணை முடிவில் அறிக்கை ஒன்றை 15


### மத்திய கிழக்கில் பெரும் பதற்றம்:

## இஸ்ரேலின் ஏவுகணை தாக்குதலில் ஹிஸ்புல்லாஹ் தலைவர் உயிரிழப்பு

பெய்ரூட், செப். 29

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லாஹ் கொல்லப்பட்டார். இதையடுத்து, மத்திய கிழக்கில் பெரும் பதற்ற நிலைமை உருவாகியுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலிலேயே நஸ்ரல்லாஹ் கொல்லப்பட்டார். எனினும், அவர் கொல்லப்பட்டமையை நேற்றையதினமே இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்தது. ஹிஸ்புல்லாஹ் அமைப்பும் நேற்று மாலை ஹசன் நஸ்ரல்லாஹ்வின் மரணத்தை உத்தியோக 15



## ரணிலுக்கு ஆதரவளித்தோர் பொது சின்னத்தில் போட்டி!

### சஜித்துக்கு பிரதமர் பதவி வழங்க தயாராம்

கொழும்பு, செப். 29

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த கட்சிகள் மற்றும் குழுக்களை ஒன்றிணைத்து எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக எஸ். பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை கொழும்பில் நடத்திய 15

### பாராளுமன்ற தேர்தல்:

## முதலாவதாக கட்டுப்பணம் செலுத்தியது சுயேச்சை குழு

கொழும்பு, செப். 29

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முதல் கட்டுப்பணத்தை சுயேச்சை குழு ஒன்று செலுத்தியுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக நேற்று சனிக்கிழமை அந்தக் குழு கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்திய முதல் குழு இதுவென்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்திருந்தார். (ஐ)

## இலங்கைக்கு புதிய முதலீடுகள் அமெரிக்க அரசாங்கம் தயார்!

### அந்நாட்டு தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 29

இலங்கையின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு புதிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கொண்டு வருவதற்கு அமெரிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் 32ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த இந்த நிகழ்வில் அமெரிக்க வர்த்தக சபை அதிகாரிகள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தபால்மூல வாக்கு விண்ணப்பம் நாளைமறுதினம் முதல் ஏற்பு!

### தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, செப். 29

பாராளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கு விண்ணப்பங்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 8ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "தபால் மூல வாக்களிப்பு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைக்குள் வருமான வரியை செலுத்தி முடித்தல் வேண்டும்!

## உள்நாட்டு இறைவரி திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, செப். 29

**2023-2024 மதிப்பீட்டு ஆண்டுக்கான இறுதி வருமான வரியைச் செலுத்த வேண்டிய அனைத்து நபர்களும், அந்த மதிப்பீட்டாண்டுக்குரிய அனைத்து வருமான வரியையும் 2024 செப்ரெம்பர் 30ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகச் செலுத்தி முடித்தல் வேண்டும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு, **2023 - 2024 மதிப்பீட்டு** ஆண்டுக்கான இறுதி வருமான வரியைச் செலுத்த வேண்டிய அனைத்து நபர்களும், அந்த மதிப்பீட்டாண்டுக்குரிய அனைத்து வருமான வரியையும் 2024 செப்ரெம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகச் செலுத்தி முடித்தல் வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் வருமான வரி செலுத்தாதற்கு அல்லது தாமதமாக செலுத்துவதற்கு விதிக்கப்படும் அபராதம் மற்றும் வட்டி தள்ளுபடி செய்யப்படாது அல்லது குறைக்கப்படாது.

மேலும், 2024 ஒக்ரோபர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் நிலுவையில் உள்ள அனைத்து இயல்புநிலை வரிகளையும் செலுத்தி முடிக்குமாறு வரி செலுத்துவோருக்கு நினைவூட்டப்படுவதாகவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் திகதிக்குப் பிறகு, செலுத்தப்படாத தவறுகையில் உள்ள வரிகளுக்கு உள்நாட்டு இறைவரித் சட்ட நியதிகளுக்கு அமைவாக உள்ள சட்ட நடவடிக்கைகள் உள்ளடங்களாக கடுமையான சேகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் மேலதிக தகவல்களுக்கு 1944 அல்லது அருகிலுள்ள பிராந்திய அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறும் குறித்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

# சட்டத்தரணிகள் சங்கத்துக்கு புதிய தலைவர் நியமனம்!

கொழும்பு, செப். 29

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி அநுர மெத்தெகொட தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தலைவராக பதவி வகித்த கௌசல்ய நவரத்ன இராஜினாமா செய்ததன் பின்னர் வெற்றிடம் ஏற்பட்டது. இந்த நிலையிலேயே புதிய தலைவராக அநுர மெத்தெகொட தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதித் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ராசிக் சாரூக் நியமிக்கப்பட்டுள்ளார்.(எ)

# கொள்கை வட்டி வீதங்களை மாற்றமின்றிப் பேண முடிவு!

கொழும்பு, செப். 29

கொள்கை வட்டி வீதங்களை மாற்றமின்றி தொடர்ந்தும் ஒரே மட்டத்தில் பேண இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இதற்கமைய துணைநில் வைப்பு வசதி வீதம் 8.25 சதவீதமாகத் தொடர்ந்தும் பேணப்படவுள்ளது. அத்துடன், துணைநில் கடன் வசதி வீதம் 9.25 சதவீதமாக மாற்றமின்றி பேணப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, உள்ளூர் சந்தையிலிருந்து கணிசமான டொலர்களை மத்திய வங்கி கொள்வனவு செய்ததன் ஊடாக உத்தியோகபூர்வ கையிருப்பு கடந்த ஒகஸ்ட் மாத இறுதியில் 600 கோடி டொலர்களாக உயர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பாடசாலை விசேட நிகழ்வுகளுக்கு பெற்றோரிடம் பணம் பெறக்கூடாது

## கல்வி அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

பாடசாலைகளில் நடைபெறும் விசேட நிகழ்வுகளுக்குப் பெற்றோரிடமிருந்து பணம் அறவிடக் கூடாது எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள், வலய கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் நடைபெறும் சிறுவர் தினம், ஆசிரியர் தினம் போன்ற விசேட நிகழ்வுகளுக்காகப் பெற்றோரிடமிருந்து பணம் அறவிடுவது தொடர்பில் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றமையை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரச கட்டுப்பாட்டு விலையில் அரிசி விற்பனை செய்யப்படும்

கொழும்பு, செப். 29

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையின்கீழ் அரிசியை சந்தைக்கு வெளியிட மிகப்பெரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதனை 'அரலிய' அரிசி ஆலை குழுமத்தின் தலைவர் டட்லி சிறிசேன நேற்று அறிவித்தார்.

மேலும், "நாட்டில் ஜனாதிபதி ஆற்றிவரும் பணிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், இன்று (நேற்று) முதல் அனைத்து அரிசி வகைகளையும் கட்டுப்பாட்டு விலையில் வர்த்தகம் செய்ய தீர்மானித்துள்ளோம். இதனை நடைமுறைப்படுத்துமாறு ஒட்டுமொத்த வர்த்தக சமூகத்திடமும் கேட்டுக்கொள்கிறேன்.

ஜனவரி 20 வரை மட்டும் இந்த ஆதரவு வழங்கப்படும். இந்த திகதியை தேர்ந்தேடுத்தற்கு காரணம், சந்தைக்குப் புதிய அறுவடைகள் வருகின்றன, அப்போது எங்களுக்கு நெல்லுக்கு புதிய விலையும் அரசிக்கு புதிய விலையும் வேண்டும். அதனால்தான் - என்றும் கூறினார். (ஐ)

# திருட்டுகளில் ஈடுபட்ட நால்வர் கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி, செப். 29

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் நடந்த திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்களை தாம் கைது செய்துள்ளனர் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.


அத்துடன், அவர்கள் திருட்டுக்குப் பயன்படுத்திய 3 மோட்டார் சைக்கிள்களை கைப்பற்றியதாகவும் களவாடப்பட்ட நகைகள் சிலவற்றை மீட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் கிளிநொச்சி, இராமநாதபுரம், புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை, நெடுங்கேணி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர்.

களவாடிய நகைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள வங்கிகள் மற்றும் அடைவு பிடிக்கும் நிலையங்களில் அடைவு வைத்து 28 இலட்சம் ரூபாயை நால்வரும் பெற்றுள்ளனர் என்று விசாரணைகளில் தெரிய வந்ததாகவும் கூறப்பட்டது.

சந்தேகநபர்களை நால்வரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருவர் பேராசிரியர்களாக உயர்வு





யாழ்ப்பாணம், செப் 29

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடை பெற்றது.

இதில், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் வணிக வியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிவபாலன் அச்சுதன் வணிகவியல் பேராசிரியராக பதவி உயர்த்தப்பட்டார்.

இதேபோன்று, விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி முருகதாஸ் தணிகைச் செல் வன் இலத்திரனியல் பேராசிரியராக பதவி உயர்த்தப்பட்டார்.

# தீ விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, செப். 29

வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பு - கொஸ்வத்தை - தும்மோதர பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தத் தீ விபத்தில் அதே இடத்தை சேர்ந்த 44 வயது நபரே உயிரிழந்தவராவர்.

உயிரிழந்தவர் தனியாக வசித்து வந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஐ)

# ரெலோ மத்திய குழுவை கூட்டுமாறு கோரிக்கை!

யாழ்ப்பாணம், செப். 29

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) மத்திய குழுவை உடன் கூட்டுமாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் கோ. கருணாகரத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் உள்ளிட்டவர்கள் இந்தக் கோரிக்கையை கடிதம் மூலமாக நேற்று விடுத்தனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தேர்தல் தொகுதிகளில் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) சார்பில் போட்டியிட விரும்பும் கட்சி உறுப்பினர்களுக்குள் தகுதி உடையவர்களை இனங்கண்டு கட்சியின் முழுஇணக்கப்பாட்டுடனும் கட்சியின் முழுமையான ஒத்துழைப்புடனும் வெற்றி பெறத் தகுதியுடைய பொருத்தமான வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கே மத்திய குழுவை கூட்டுமாறு கோரிக்கை விடுக்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

# 101 மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு

வவுனியா, செப். 29

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் 2002 ஆம் ஆண்டு உயர்தரம் கற்ற மாணவர்களால் 101 சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்களை சேர்ந்த மாணவர்கள், பெற்றார் இல்லாத மாணவர்கள், உதவி தேவைப்படும் மாணவர்கள் என்று தெரிவு செய்யப்பட்ட 101 மாணவர்களுக்கே இந்த சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடந்த இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்கள், வவுனியா நகர கிராம சேவகர், பாடசாலையின் அபிவிருத்தி குழு செயலாளர், பழைய மாணவர் சங்க செயலாளர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல்களை கண்டறிய விசேட குழு

## பிரதமர் ஹரிணி பணிப்புரை



கொழும்பு, செப். 29

**அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல்களை கண்டறிய விசேட குழு ஒன்று பிரதமர் ஹரிணி அமரசூரியவால் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு ஊழல் மோசடிகள் வெளிப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

இதேவேளை, விளையாட்டு அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் செலவு செய்யப்பட்டமை குறித்த புள்ளிவிவரங்கள் உள்ள போதிலும் அதன் முன்னேற்றம் தொடர்பில் உரிய கணக்காய்வு நடத்தப்பட வேண்டுமெனவும், அதுதொடர்பில் உடனடியாக உள்ளக கணக்காய்வொன்று நடத்தப்பட வேண்டுமெனவும் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார்.


பிரதமர் என்ற முறையில், எனது பொறுப்பில் உள்ள அனைத்து அமைச்சுக்களிலும் செய்யப்பட வேண்டிய மற்றும் இதுவரை செய்யப்படாத முன்னுரிமை திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. குறிப்பாக விளையாட்டு அமைச்சில் பல முக்கிய விடயங்கள் தெரியவந்துள்ளன.

ஓர் அரசாங்கம் என்ற வகையில், பொது நிதியை வீண் விரயம் செய்தல், துஷ்பிரயோகம் செய்தல் குறித்து நாங்கள் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறோம், செலவீனங்களைக் கட்டுப்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். எனவே, விழாக்களுக்கு செய்யும் வீண் விரயத்தை குறைக்க வேண்டும்.

அரசாங்கத்திடமிருந்து கிடைத்த ஒதுக்கீடுகள் மற்றும் செலவழிக்கப்பட்ட தொகைகள் குறித்த புள்ளிவிவரங்கள் அமைச்சிடம் உள்ளன. ஆனால், அந்த செலவீனங்களின் முன்னேற்றம் குறித்து இதுவரை எந்த அவதானிப்பும் செய்யப்படவில்லை. செலவழித்த பணத்தில் என்ன நடந்தது என்பது பற்றி விரைவாக உள்ளக கணக்காய்வு ஒன்று செய்யப்பட வேண்டும்.

அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள பல்வேறு மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்து கண்டறிய நிறுவன ரீதியாக குழுக்கள் நியமிக்கப்படுவதில்லை. அதற்கான முறையான வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது.

மற்றுமொரு முக்கிய விடயம் இக்கலந்துரையாடலின் போது வலியுறுத்தப்பட்டது. விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் கடமைகளின் போது நிகழும் வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் குறித்து கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கு விளையாட்டு அமைச்சிடம் முறையானதொரு திட்டம் இல்லை. எனவே, வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் குறித்து கண்டறிந்து விழிப்புணர்வை ஏற்படுத்த சரியான வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு நான் தெரிவித்துள்ளேன் என பிரதமர் மேலும் தெரிவித்தார். (எ)



# சர்வதேச புத்தகக் கண்காட்சியை ஜனாதிபதி அநுர பார்வையிட்டார்

கொழும்பு, செப். 29

இலக்கிய மாதத்தை யொட்டி 25 ஆவது தடவையாக கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படும் கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்றுப் பார்வையிட்டார்.

இதன்போது, இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமந்த இந்திவர, சிறுவர் புத்தகங்கள் தொடர்பிலான தேசிய கொள்கைப் பத்திரத்தை ஜனாதிபதி அநுரகுமாரவிடம் வழங்கி வைத்தார்.

கண்காட்சிக்கு வருகை தந்திருந்த மக்கள் ஜனாதிபதிக்கு விசேட வரவேற்பளித்தனர்.

இங்கு 400 புத்தக கூடங்கள் அமைக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றைப் பார்வையிட வந்திருந்த மக்களோடு ஜனாதிபதி சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுகின்ற கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி செப்ரெம்பர் 27 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 06 ஆம் திகதி இரவு 09. 00 மணி வரையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடத்தப்படுகிறது. (எ)

# ஒக்ரோபர் 21ஆம் திகதி வரை வவுச்சர்கள் செல்லுபடியாகும்

கொழும்பு, செப். 29

பாடசாலை மாணவிகளுக்கு வழங்கப்படும் சுகாதார துவாய்கள் (சனிட்டரி நாப்கின்) வவுச்சர்களின் பி பிரிவு செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை அறிவித்துள்ளது. இதன்படி, வவுச்சர்கள் செல்லுபடியாகும் காலம் ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர்களின் பொறுப்பு குறித்து அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, செப். 29

அமைச்சர்களின் பொறுப்பில் உள்ள விடயதானங்கள், செயல்பாடுகள், திணைக்களங்கள், சட்டபூர்வ அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்களின் செயல்பாடுகள் தொடர்பில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 44 ஆவது சரத்தின் உப சரத்து (1) இன் கீழ், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (எ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி 19 வயது இளைஞன் கொலை

## மட்டு. சுவிஸ் கிராமத்தில் பயங்கரம்

மட்டக்களப்பு, செப். 29

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுவிஸ் கிராமத்தில் வீதியில் சத்தம் எழுப்பியவாறு மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற 19 வயது இளைஞன் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.

இதனையடுத்து, தாக்குதலில் ஈடுபட்ட 30 வயது நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

சுவிஸ் கிராமத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞனே உயிரிழந்தார்.

சம்பவ தினத்தன்று இரவு வீதியில் அதிக ஒலி எழுப்பியவாறு மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனுடன் சிலர் தகராறில் ஈடுபட்டனர்.

அப்போது, இளைஞனின் தந்தை தனது மகனை அங்கிருந்து மீட்டு அழைத்துச் சென்றுகொண்டிருந்தபோது, அவர்களை பின்தொடர்ந்து வந்த கூட்டத்தினர், இளைஞனின் கழுத்துப் பகுதியை குறிவைத்து கூரிய ஆயுதத்தால் தாக்கினர்.

இதில் படுகாயமடைந்த இளைஞன் மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்தது

இதனையடுத்து தாக்குதலில் ஈடுபட்டவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவரை பொலிஸார் கைதுசெய்தனர்.

# கிளிநொச்சியில் நீர் விநியோகத்தை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை

கிளிநொச்சி, செப். 29

கிளிநொச்சியில் நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக பொதுமக்களின் நீர்ப் பாவனை வழமைக்கு மாறாக அதிகரித்துள்ளது.

கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தி திறனை விட மக்களின் பாவனை அதிகரித்துள்ளமையால் நீர் விநியோகத்தை 24 மணிநேரமும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதனால் தற்காலிகமாக குறிப்பிட்ட காலம் வரை மட்டுப்படுத்தப்பட்ட நேரத்துக்கு நீரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறித்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாக வெப்பமான காலநிலை நிலவிவருவதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதனடிப்படையில் பூநகரி, பொன்னகர், பாரதிபுரம், விவேகானந்த நகர் ஆகிய பகுதிகளுக்கு தினமும் காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நீரை விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் காணப்படுவதனால் பொதுமக்கள் நீரை சிக்கனமாகவும், சேமித்து வைத்தும் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

# நிர்வாக சபை கூட்டம்!

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற வுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க பொது அறையில் சங்கத்தின் தலைவர் க. நாக ஜெயகுமாரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

## கற்பிட்டி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில்

# பூச்சிகொல்லி மருந்துகளை திருடிய பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு மறியல்!

புத்தளம், செப். 29

கற்பிட்டி நீதிவான் நீதிமன்ற வளாகத்திலுள்ள வழக்குப் பொருட்களை வைக்கும் அறையிலிருந்து பூச்சிகொல்லி மருந்துகளைத் திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் கற்பிட்டி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த போது வழக்குப் பொருட்களை வைக்கும் அறையிலிருந்து பூச்சிகொல்லி மருந்துகளைத் திருடியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டு புத்தளம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை தூதரகங்களில் பணியாற்றும்
# அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களை திருப்பி அழைக்க அநுர அரசு தீர்மானம்

கொழும்பு, செப். 29

**வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் பணிபுரியும் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் ஆதரவாளர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களின் குடும்ப உறவினர்களை திருப்பி அழைக்க அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் அரசாங்கத்துக்கு நெருக்கமான முக்கியஸ்தர்களின் குடும்ப உறுப்பினர்கள், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் எந்தவொரு நியமனத்தையும் வழங்குவதில்லை என்ற நிலைப்பாட்டில் உள்ளது.

இதன் காரணமாக போதிய தகுதிகள் இன்றி கடந்த காலங்களில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட அதிகாரிகளைத் திருப்பி அழைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் அவர்கள் திருப்பி அழைக்கப் பட்டு, அந்த இடங்களுக்கு இராஜதந்திர துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள் நியமிக்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.



# வடக்கு ஆளுநர் வேதநாயகனுக்கு இந்திய துணைத்தூதுவர் வாழ்த்து

யாழ்ப்பாணம், செப். 29

வடக்கு மாகாணத்தில் புதிதாக கடமைகளை பொறுப்பேற்ற ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை சந்தித்த யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, இந்தியாவுக்கும் வடக்கு மாகாணத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து ஆராயப்பட்டதாகவும் தெரியவருகிறது.(எ)

# பெரும் கூட்டணி அமைத்து போட்டியிட ஐ. தே. க. திட்டம்

## சமன் ரத்னப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, செப். 29

வரலாற்றிலேயே மிகப் பெரிய கூட்டணி அமைத்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட எதிர்பார்க்கிறோம். ஐக்கிய மக்கள் சக்தியுடனான கலந்துரையாடலும் சாதகமான நிலைக்கு வந்துள்ளது என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசிய கட்சி எடுத்து வரும் நடவடிக்கை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பாராளுமன்றத் தேர்தலுக்கு தற்போது அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. தற்போதைய நிலையில் எதிர்க்கட்சியில் இருக்கும் அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கே எதிர்பார்க்கிறோம்.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் அவ்வாறு இருப்பதாகவே எமக்குத் தோன்றுகிறது. அவ்வாறான பரந்துபட்ட கூட்டணியை அமைக்குமாறே அனைவரும் வற்புறுத்தி வருகின்றனர்.

அதனால் இந்தக் கூட்டணியை அமைப்பதற்காக தற்போது ஐக்கிய மக்கள் சக்தியுடனான கலந்துரையாடலை ஆரம்பித்திருக்கிறோம்.

அதேபோன்று, மொட்டுக் கட்சியின் பெரும்பான்மை பிரிவினர், சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடனும் கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது.

ஓரிரு தினங்களில் இந்தக் கலந்துரையாடல்களை முடிவுக்கு கொண்டுவர முடியும். அதனால் வரலாற்றில் பெரிய கூட்டணி அமைத்து பாராளுமன்றத் தேர்தலில் பாடேட்டியிட திட்டமிட்டுள்ளோம் - என்றார். (எ)

# பாடசாலை மாணவர்களுடன் பயணித்த பேருந்து விபத்து!

## சாரதி உட்பட நால்வர் காயம்

கண்டி, செப். 29

கண்டி - பதுளை பிரதான வீதியின் பெலிஹூல் ஓயா பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானது.

சாரதியின் கட்டுப்பாட்டை யிழந்த நிலையில் இந்தப் பேருந்து விபத்துக்குள்ளாகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் பேருந்து சாரதி மற்றும் 3 மாணவர்கள் காயமடைந்தனர் என்று பொலிஸார் கூறினர்.

(எ)

# 5 கஜமுத்துக்களுடன் ஒருவர் கைதானார்

கொழும்பு, செப். 29

நீர்கொழும்பு பிரதேச குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் விற்பனைக்காகத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 5 கஜமுத்துக்களுடன் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்தனர்.

இந்த கஜமுத்துக்களின் பெறுமதி சுமார் ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் என பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கெலிஓயா பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவராவார்.

இதேவேளை, கைதான சந்தேக நபர் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (எ)

# முன்னாள் அமைச்சர் குமார வெல்கம காலமானார்

கொழும்பு, செப். 29

முன்னாள் அமைச்சரும் களுத்துறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம காலமானார். அவருக்கு வயது 74.

தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் நீண்டகால உறுப்பினராக



இருந்த வெல்கம, பின்னர் அதிலிருந்து விலகி நவலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரானார்.

2020 பொதுத் தேர்தலில், அவர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்குத் தெரிவானார்.

குமார வெல்கம கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராகவும், போக்குவரத்து அமைச்சராகவும் பணியாற்றினார்.(எ)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக் கூடம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் சத்திர சிகிச்சைக் கூடம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் புதிதாக சத்திர சிகிச்சைக் கூடக் கட்டடம் மற்றும் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் என்பன நிர்மாணிக்கப்பட்ட போதிலும் ஆளணிப் பற்றாக்குறை, வளப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வருடக் கணக்கில் சத்திர சிகிச்சைக் கூடத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில், அண்மையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை விவகாரம் பூதாகரமாக வெடித்திருந்தது. புதிய வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் ரஜீவ் சத்திர சிகிச்



சைப் பிரிவை இயக்க நடவடிக்கை எடுத்து அதில் வெற்றியும் கண்டுள்ளார்.

சத்திர சிகிச்சை நிபுணர் பேராசிரியர் ரவிராஜ், மகப்பேற்று நிபுணர் சிறீ சுபாஸ்கரன் உள்ளிட்டோர் அடங்கிய மருத்துவக் குழுவினர் சத்திர சிகிச்சைக் கூடத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

ஆரம்ப தினத்தில் கேர்னியா நோயாளிக்கான சத்திர கிகிச்சை, இரு சிசேரியன் சத்திர சிகிச்சைகள், மேலும் நான்கு சிறிய சத்திர சிகிச்சைகள் என்பன வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சத்திர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதன் பயனாக யாழ். போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்களை அனுப்பும் நிலைமை வெகுவாகக் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# இந்திய உயர்ஸ்தானிகர் ரவூப் ஹக்கீம் சந்திப்பு



கொழும்பு,செப். 29

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் அரசியல் முன்னேற்றங்கள் மற்றும் இந்திய - இலங்கை உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
29.09.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மாற்றங்களை புரிந்துகொள்ளுங்கள்

சிங்கள மக்கள் மத்தியில் புதியவர்களைத் தேடும் போக்கு அதிகரித்து வருகின்றது. தேசிய மக்கள் சக்தி அதனை துல்லியமாகக் கணித்து செயல்படுகின்றது. புதியவர்களைத் தேடுவது என்பது புதியவர்கள்மீதான நம்பிக்கையில் நிகழவில்லை. மாறாக, பழையவர்கள்மீதான வெறுப்பிலிருந்தே ஆரம்பிக்கின்றது. இதனைக் கச்சிதமாகக் கையாள்வதன் மூலம் தங்களை நிலைப்படுத்திக் கொள்ள ஜே. வி. பியின் புதிய தலைமை முயற்சிக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வெற்றியை மூலதனமாகக் கொண்டு பாராளுமன்றத்தையும் கைப்பற்றும் வியூகங்களை வகுக்கின்றனர். அரசியலில் ஆருடங்களை முன்வைக்க முடியாது. புதியவர்கள் நல்லதும் செய்யலாம் - பழையவர்கள் போன்று தோல்வியையும் சந்திக்கலாம். ஆனால், அரசியலில் நிகழும் மாற்றங்களைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்பட வேண்டியது கட்டாயமானது. இல்லாவிட்டால் படுமோசமான தோல்வியை சந்திக்க வேண்டிவரும்.

தற்போதுள்ள, சூழலில் ஒருபுறம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தேர்தலுக்கு தயாராகி வருகின்றது. இன்னொருபுறம் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தன்னை தயார்ப்படுத்துகின்றது. தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்திய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பாகப் பயணிப்பதா அல்லது வழமைபோல் பயணிப்பதா என்னும் முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. ஒருவேளை சிவில் சமூகமும் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து பயணிக்கும் முடிவை எடுக்குமாயின், ஒப்பீட்டடிப்படையில் அது ஒரு புதிய அரசியல் கலாசாரமாக நோக்கப்படும். ஆனால், அவ்வாறானதொரு புதிய அரசியல் கலாசாரத்துக்குள் தங்களை உட்புகுத்துவதற்கான தகுதி நிலையில் அரசியல் கட்சிகள் இருக்கின்றனவா என்பதுதான் தாண்டிச்செல்ல முடியாத கேள்வியாக இருக்கின்றது.

இன்றுள்ள அரசியல் கட்சிகள் எவற்றின்மீதும் மக்கள் மத்தியில் நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை. பாரம்பரிய கட்சியென்னும் அடிப்படையிலும் தமிழ் உணர்வின் அடிப்படையிலுமே தமிழ் மக்கள் வாக்களிப்பில் பங்குகொள்கின்றனர். இதைத் தவிர, கட்சிகள்மீதான நம்பிக்கையில் மக்கள் வாக்களிக்கவில்லை. இதனை கட்சிகளின் தலைவர்களால் புரிந்து கொள்ள முடிகின்றதா என்பது அடுத்த கேள்வி. ஆனால், கட்டாயமாகப் புரிந்துகொள்ள வேண்டும் - புரிந்துகொண்டால்தான் கட்சிகளுக்கு எதிர்காலமுண்டு. தங்களுடன், தங்களின் கட்சிகளின் கதையும் முடியட்டும் என்று எண்ணினால் அது வேறுவிடயம்.

தமிழ்த் தேசியக் கட்சிகளாகத் தங்களை அடையாளப்படுத்துபவர்கள் புதியவர்களை அரசியலுக்கு அறிமுகம் செய்ய வேண்டும். தற்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர்த்து ஏனையவர்கள் அனைவரும் புதியவர்களாக இருப்பதே சிறப்பானது. பலமுறை பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் தொடர்ந்தும் போட்டியிட வேண்டுமென்னும் மனோநிலையிலிருந்து விடுபட்டு, புதியவர்களுக்கு இடத்தைக் கொடுப்பதன் ஊடாக மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும். இல்லாவிட்டால் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாக போட்டியிட்டாலும்கூட மோசமான தோல்வியையே சந்திக்க நேரிடும். ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் முன்னிலையில் முகம் காண்பிக்கும் வயதுபோனவர்கள் தேர்தல் அரசியலிலிருந்து ஒதுங்குவதே சரியானது - நியாயமானது. இதேபோன்று தமிழ் அரசுக் கட்சியிலிருக்கும் 70 வயதை கடந்தவர்கள் பதவிநிலை அரசியலில் இருக்க வேண்டுமென்னும் மனோபாவத்தையும் கைவிட வேண்டும்.

இன்றைய நிலையில் தமிழ்த் தேசிய அரசியல் என்பது பெருமளவுக்கு முதியோர் இல்ல அரசியலாகவே இருக்கின்றது. இதனை மாற்றியமைப்பது தொடர்பில் கட்சிகளின் தலைமைகள் சிந்திக்க வேண்டும். கட்சிகளிலுள்ள மூத்தவர்கள் தங்களை முதுநிலைத் தலைவர்களாக - ஆலோசக நிலைத் தலைவர்களாக மட்டுப்படுத்திக்கொண்டு அல்லது கட்சியின் அதியுயர் பீடமாக முன்னிறுத்திக் கொண்டு முன்னரங்கை புதியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால், தமிழ் அரசியலுக்கு ஏழரை சனி நிச்சயம் பிடிக்கும். இந்தக் காலத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்பவர்கள் வெற்றிபெறுவார்கள். அவர்களே தமிழ் அரசியலை கட்டுப்படுத்தப் போகின்றனர்.

# 'நாட்டை தூய்மையாக்குவோம்' செயல்திட்டம் முன்னெடுப்பு!



வடமராட்சி, செப். 29

லயன்ஸ் கழகம் "நாட்டைத் தூய்மையாக்குவோம்" தொனிப்பொருளில் கடற்கரையை சுத்தமாக்கும் சிரமதான பணியை நேற்று சனிக்கிழமை பருத்தித்துறை தும்பளை கடற்கரையில் முன்னெடுத்தது.

வட பிராந்திய லயன்ஸ் கழக தலைவர் வேலுப்பிள்ளை தவச்செல்வம் தலைமையில் யாழ்ப்பாணத்தின் ஏழு லயன்ஸ் கழகங்கள் இணைந்து இந்த சிரமதானப் பணியை முன்னெடுத்தன.

இந்த சிரமதானப் பணியில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பாதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையில் 30இற்கும் மேற்பட்ட பொலிஸாரும் தும்பளை கிழக்கு சமுர்த்தி குழுவினரும் பங்கேற்றிருந்தனர்.

சேகரிக்கப்பட்ட கழிவுகளை ஏற்றிச்செல்வதற்கு பருத்தித்துறை பிரதேச சபை வாகனங்களை வழங்கி உதவியது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# அமைச்சுகளின் விடயங்கள் தொடர்பில் வர்த்தமானி!

கொழும்பு, செப். 29

புதிய அமைச்சுகளுக்கு அமைவான நிறுவனங்கள் மற்றும் அமைச்சர்களின் கீழான விடயப் பரப்புக்களை வேறுபடுத்துவதற்கு அமைவான 2403/53 - 2024 இலக்க வர்த்தமானி அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 44 உறுப்புரையின் (1) இலக்க உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

புதிய அரசாங்கத்தின் தற்காலிக அமைச்சரவை அண்மையில் நியமிக்கப்பட்டமை தெரிந்ததே

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல்வேறு உதவித் திட்டங்கள்!



வடமராட்சி, செப். 29

தொண்டைமானாறு ஆச்சிரமத்தின் ஞானச்சுடர் 321ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

ஆச்சிரமத்தின் முதல்வர் மோகன் சுவாமிகள் முன்னிலையில் ஆச்சிரமத்தின் சைவ கலை, பண்பாட்டு பேரவையின் தலைவர் ஆ. சிவநாதன் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றன.

நிகழ்வில், யா/ பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக,


2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான போட்டோ பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.

புலோலி தென்மேற்கு மூத்தோர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக முதியோர் தினத்தை முன்னிட்டு 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 300 கிலோ அரிசியும் 25 ஆயிரம் ரூபாய் நிதியும் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட பணிமனையின் கோரிக்கைக்கு அமைவாக முதியோர் தினத்தை முன்னிட்டு 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் ஆடைகள் வழங்கி வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நிர்மாணிக்கப்படும் விநாயகர் ஆலயத்துக்கு 5 இலட்சம் ரூபாயும் திருகோணமலை பெரியகடை முத்துமாரி அம்மன் ஆலய கட்டுமானத்துக்கு ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டன. (ஐ-02)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா. மஞ்சுளா

# போர்களற்ற உலகத்தை நோக்கி...

உயிர்களால் நேசிக்கப்படும் இயற்கை அன்னை எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்ற பொதுவுடைமைக் கொள்கையுடன் இயங்குவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். வானத்திலிருந்து பொழியும் மழைநீர் தனி ஒருவருக்கு மட்டும் பொழியாமல் எல்லா உயிர்களுக்கும் பொதுவாகவே பொழிகிறது. மலைகளையும், நீர்நிலைகளையும், தாவரங்களையும் ஒருசிலரே பயன்படுத்த முடியும் என்று சொல்லி மற்றவர்களுக்குத் தடைவிதிப்பதில்லை. ஆனால், இயற்கையிலிருந்து பிறந்த மனிதன் மட்டும் தன்னல உணர்வால் இயற்கை வளங்களையும், மற்றவர் நலன்களையும் கபளீகரம் செய்து கொண்டே இருக்கிறான்.

உரிமைக்காக, உடைமைக்காக ஒருவர் மற்றவருடன் சண்டையிட்டுக் கொள்வது உலகம் தொடங்கிய நாள் முதல் இன்றுவரை தொடர்கிறது. மற்றவரின் உரிமையைப் பறிக்காமலும், தன் உரிமையில் பிறர் தலையிட அனுமதிக்காமலும் வாழ முற்படும் வாழ்க்கையே பொருள் நிறைந்தது. இதில் பிரச்சினை ஏற்படும் போது யுத்தம் தொடங்குகிறது. இருப்பினும் பண்புடைய மக்கள் போர்களற்ற உலகத்தைப் படைக்கும் முயற்சியை ஒருபோதும் கைவிட்டதில்லை. நாட்டை விரிவுபடுத்தும் நோக்கத்தில் எல்லையைக் காரணமாகக் கொண்டு போர்கள் வெடிக்கின்றன. இன்னொரு பக்கம் சார்ந்திருக்கும் மதத்தைச் சொலிக் குண்டு வைக்கும் கொடுமை நடந்து வருகிறது. இனத்தின் அடிப்படையில், சாதியின் அடிப்படையில், மொழியின் அடிப்படையில் ஓர் இனத்தைக்



கொன்று குவித்து வருகின்றனர். பயங்கரவாதமும், வன்முறையும் தலை விரித்தாடும் சூழலில் மக்கள் எப்போதும் அச்சத்துடனே வாழ வேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது.

எந்த காலகட்டமாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளும் போது பேரழிவும், அதைத் தொடர்ந்து வறுமையும், பசியும், மீண்டும் கணக்கில்லா உயிரிழப்பும் ஏற்படுகின்றன. சொந்த நிலத்தில் அகதிகளாக மாறும் பேராபத்தும், பொருளாதாரச் சரிவும், வேறு நாடுகளில் தஞ்சமடையும் அவல நிலையும் ஏற்படுகின்றன.

போர்களற்ற அமைதியான உலகத்திற்கு அடிப்படையாக அமைவது நீதியைப் பாதுகாக்கும் செயல்பாடு. சுருக்கமாகச் சொன்னால் நீதி நிலைத்திருக்கும் இடத்தில் அமைதி குடிகொள்ளும் என்பது அறிஞர்களின் கருத்து.

கட்டவிழ்க்கப்படும் அநியாயச் செயல்களால் மக்களிடையே அவநம்பிக்கையும், பயமும் பரவுகின்றன. அமைதியான சூழலைக் குடும்பத்திலிருந்து தொடங்க வேண்டும் என்பதே சரியான அணுகுமுறை. குடும்பத்தில் அமைதி இருக்குமானால் பிள்ளைகள் வன்முறையற்றவர்களாக வளரும் வாய்ப்பு கிடைக்கிறது. வேலை இடத்தில் அமைதி வேண்டும் என்று நினைப்பது போலச் சமுதாயத்திலும் அமைதியான சூழல் நிலவ வேண்டும் என்று விரும்புகிறோம்.

இந்த உலகத்தின் எந்த மூலையிலாவது போர் தொடங்குமானால் அது பதற்றத்தையும் வேலைவாய்ப்பின்மையையும் தொற்றுநோயையும் கூடவே சுற்றுச்சூழல் மாசையும் கொண்டு வந்து சேர்த்துவிடும். இதிலிருந்து, சமாதானம் அமைதி என்பது தனி மனித நிலையிலிருந்து உலகளாவிய நிலை வரை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகத் தெரிகிறது. எனவே சமாதானப் போக்கைக் கைகொள்வதன் அவசியம் விளங்கும்.

இயற்கைச் சீற்றங்களான நிலநடுக்கம், காட்டுத்தீ, வெள்ள அபாயம் போன்றவற்றால் வரும் அழிவைக் காட்டிலும் போரின் காரணமாக ஏற்படும் செயற்கை அழிவால் மனித இனம் நிலை குலைந்து போகிறது. முதல் உலகப் போரின் போதும், இரண்டாம் உலகப் போரின் போதும் மனித இனம் அனுபவித்த கொடுமைகளை வார்த்தைகளால் சொல்லி முடியாது.

தற்போது இஸ்ரேல் - ஹமாஸ் போர், உக்ரைன் - ரஷ்யா போர், இவற்றின் தீவிரத்தன்மையைக் கண்டு உலக நாடுகள் அச்சம் கொண்டுள்ளன. பல அழிவுகள் நடந்த பிறகுதான் மனிதர்கள் சமாதானத்தின் முக்கியத்துவத்தை உணர்வது என்பது கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஈடானது.

உலகத்தை அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்கும், பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், வாழ்வை மேம்படுத்துவதற்கும், பண்பாட்டைப் பேணி வளர்ப்பதற்கும் அமைதியைப் பரப்ப வேண்டியது இன்றைய தேவை. அஹிம்சையை, அன்பை மற்றவர்களுக்குச் சொல்லித் தருவதற்கு முன்னால் நமக்குள் அமைதியைக் மேற்கொள்வது முக்கியம்.

எனவே அமைதியைப் பேணுவது நம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் என்று உணர்வோம்! சமாதான உணர்வை உண்டாக்குவதை ஒரு வேலையாக நினைக்காமல் அதை வாழ்க்கையின் அங்கமாக உணரும் பட்சத்தில் உலக மக்களிடையில் சாந்தியையும், சமாதானத்தையும் உருவாக்கிவிடலாம்.

பயங்கரவாதம், வன்முறையிலிருந்து மனித இனத்தை மீட்டெடுத்து, அமைதியை நிலைநாட்டும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 21-ஆம் தேதியை உலக அமைதி தினமாக அனுசரிக்க ஐ.நா. அறிவித்தது. இந்த ஆண்டு உலக அமைதி தினத்தை 'அமைதிக் கலாசாரத்தை வளர்த்தல்' என்ற தலைப்பில் கொண்டாட உலக நாடுகளுக்கு ஐ.நா. அழைப்பு விடுத்துள்ளது.

ஒரு நாகரிக சமூகத்தின் அடையாளமே எல்லோரையும் அரவணைத்துச் செல்வதில் அடங்கியிருக்கிறது. புரிதலாலும், சகிப்புத்தன்மையாலும், இரக்கத்தாலும் உறவாடுவோம்! மனித உரிமைகளை மதிப்பதன் வழியாகச் சக மனிதரைக் கண்ணியத்துடன் நடத்துவதற்கு உறுதி ஏற்போம்! நமது மனநிலையில் இப்படியான மாற்றம் நிகழும்போது இணக்கமான வாழ்வு தானாகவே வந்து சேர்ந்துவிடும். கருத்து வேறுபாட்டை மாற்றும் வழியாகச் சண்டையைத் தேர்வு செய்தால் முடிவு விபரீதமாகவே இருக்கும். வேறுபாடுகளை சமரசமான முறையில் தீர்க்க முற்படுவதே அமைதிக்கான பாதை!

## இந்தவார ராசிபலன் 22.09.2024 - 28.09.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 13
நல்ல நேரம்: 6.02 - 07.32 ராகு காலம் : 10.32 - 12.02 திதி : தசமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உங்களுக்கு ஆபரண சேர்க்கை உண்டு. உடன் பிறப்புகளிடம் கருத்து வேறுபாடு ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சில விஷயங்களில், சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் உங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவர். பெண்களின் ஆதரவால் லாபம் ஏற்படும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்படும். புத்திர பாக்கியம், பதவி உயர்வு, புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். ஆன்மீகவாதிகளின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வருமானம் அதிகம் வந்தாலும், செலவுகளை கட்டுப்படுத்த முடியாது. தொழிலில் கூட்டாளியின் புதிய ஆலோசனைகள் வரவேற்கத்தக்கதாக இருக்கும். அவரது கடமை உணர்வும், திறமையும் உங்களுக்கு திருப்திகரமாக இருந்தாலும், அவரை முழுமையாக நம்பி விடாதீர்கள். சிலருக்குக் குதூகலமாய் இருந்த குடும்ப ஒற்றுமை குறைவதால் மகிழ்ச்சி குறையும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் நன்மை ஏற்பட்டு, வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். பிரயாணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். குடும்பத்தில் சில நேரங்களில் அமைதியின்மையும் நிலவும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் பெரியவர்கள் ஆலோசனைக்கு ஏற்ப பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவீர்கள். நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். விரும்பிய பொருட்களை வாங்கக் கூடிய அளவுக்குத் திருப்திகரமான தனவரவு இருக்கும். நல்லவர்களின் தொடர்பு நன்மைகள் அதிகம் ஏற்படலாம். புதிய தொழில் தொடர்புகள் மூலம் எதிர்பார்ப்புக்கு மேல் பணவரவு ஏற்படும். அரசு அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். சிலருக்குத் திருமணம், சந்ததி விருத்தி ஏற்படும். சகோதரரால் நன்மைகள் உண்டு. மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து போராடி வெற்றி பெறுவீர்கள். தொழிலில் பொருட்களின் உற்பத்தி பெருகி, இலாபமும் எதிர்பார்த்தபடி அதிகரிக்கும். அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். எதிர்பாராத தனவரவுகள் இருக்கும். திருமணம், வளைகாப்பு போன்ற சுப காரியங்களுக்கு வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். நல்ல வகையான உணவு வகைகளை உட்கொள்வார்கள். டீக்காக உடையணிந்து ஆட்களை [illegible]

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். அவர்கள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவிகள் கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். மாணவர்கள் தங்கள் கிரகிப்பு தன்மையால் கல்வியின் தரத்தை உயர்த்தி கொள்வர்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப்பெரிய சாகசங்களை புரிவீர்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் புது தெம்பும், உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். பக்திப் பெருக்கினால் ஞானத் தன்மை எய்துவார்கள். சிலருக்கு அதிகாரப் பதவியும், அமைச்சர் போன்ற பதவிகளும் கிடைக்கும். நண்பர்களிடம் சுமுகமாக இருக்க முயற்சியுங்கள். பயணங்களால் செலவுகள் அதிகமாகும், ஆதலால் பணமுடையும் இருக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். எப்போதும், உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உறவினர்களுடன வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் கலைஞர்களுக்கு சிறப்பான வாரம். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி, கை நிறைய முன் பணம் பெற்று மகிழ்வர். தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு இதுநாள் வரை இருந்து வந்த இழுபறி நிலைகள் பகலவனை கண்ட பனி போல விலகும். சிலருக்கு வருமான வரி பிரச்சனைகள் தலை தூக்கலாம் எனவே, கம்பெனி கணக்குகளை சீராக எழுதி வைக்கவும். இல்லையெனில் சிக்கல்களைச் சந்திக்கலாம். வந்த பின் [illegible] விட, வருமுன் காப்பது தானே புத்திசாலித்தனம். வீட்டில் பிடிவாதங்களை தளர்த்[illegible]ணக்குகள் தீரும். இடம் சம்பந்தமான வழக்குகள் வெற்றி பெற்று, புதிய சொத்துக்கள் சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன்மைதங்கிய ஜனாதிபதியாக வந்திருக்கும் 'தோழர்'



வீரகத்தி தனபாலசிங்கம்



இரு வருடங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றம் ஜனாதிபதியாக தெரிவு செய்தபோது இலங்கை வரலாறு கண்டிராத மக்கள் கிளர்ச்சியினால் இறுதியில் பயனடைந்தவர் அவரே என்று கூறப்பட்டதுண்டு. ஆனால், கடந்தவாரம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் அந்த கிளர்ச்சியின் உண்மையான பயனாளி யார் என்பதை உலகிற்கு காட்டியது.

இடதுசாரி அரசியல் கட்சிகளினதும் அவற்றின் தொழிற் சங்கங்களினதும் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட 1953 ஒகஸ்ட் ஹர்த்தால் போராட்டத்துக்கு பிறகு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்வை பயன்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க மூன்று வருடங்களுக்கு பிறகு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பிரதமராக பதவிக்கு வந்ததைப் போன்று "அறகலய" மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு இரு வருடங்கள் கடந்த நிலையில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரு நிகழ்வுகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசங்கள் இருக்கின்றன. பண்டாரநாயக்க ஹர்த்தாலை ஆதரிக்காமலேயே அதன் விளைவாக மாற்றமடைந்த அரசியல் சூழ்நிலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தினார். ஹர்த்தாலை நடத்திய இடதுசாரி தலைவர்களினால் அவ்வாறு செய்ய முடியவில்லை. அந்த போராட்டத்தின் வெற்றியினால் தடுமாறிப்போன அவர்கள் அடுத்த நகர்வை செய்வதற்கு பயனுறுதியுடைய தந்திரோபாயத்தை வகுக்க முடியாதவர்களாக இருந்தார்கள்.

ஆனால், திசாநாயக்க "அறகலய" வுக்கு தலைமை தாங்கவில்லை என்றபோதிலும், அவரின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவை வழங்கியது. அந்த போராட்டத்தின் விளைவாக நாட்டின் அரசியல் நிலக்காட்சியில் ஏற்பட்ட மாற்றத்தின் பயனாக அவர் இன்று ஜனாதிபதியாக வந்திருக்கிறார். அன்றைய இடதுசாரி தலைவர்களினால் அவர்களது சொந்தத்தில் ஒருபோதும் ஆட்சியதிகாரத்துக்கு வரமுடியவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் திசாநாயக்கவின் வெற்றி இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதன்முதலாக ஒரு இடதுசாரி அரசியல்வாதியை நாட்டின் தலைவராக உச்சநிலைக்கு கொண்டு வந்திருக்கிறது.

அவரது வெற்றி ஏழு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக ஆட்சியில் ஏகபோகத்தை தங்கள் பிறப்புரிமை போன்று அனுபவித்த பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்திடமிருந்து அரசியல் அதிகாரத்தை ஒரு சாதாரண குடும்பப் பின்னணியைக் கொண்ட ஒருவருக்கு கைமாற்றியிருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க திசாநாயக்கவின் வெற்றி குறித்து கருத்துக் கூறிய போது குடும்ப ஆதிக்க அரசியலை மக்கள் நிராகரித்திருப்பது பற்றி எதுவும் கூறாமல் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த தேசிய மககள் சக்தியின் தலைவர் இன்று நாட்டின் உயர்பதவிக்கு வந்ததற்கு தனது தந்தையார் பண்டாரநாயக்க



**வடக்கு, கிழக்கு மக்கள் குறிப்பாக, தமிழ் மக்கள் மாற்றத்தை விரும்பவில்லை என்று ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை வியாக்கியானம் செய்யமுடியாது. தென்னிலங்கை மக்கள் காணவிரும்புகின்ற மாற்றத்திற்குள் தங்களது அரசியல் அபிலாசைகளுக்கு எந்தளவுக்கு மதிப்பளிக்கப்படும் என்பதே தமிழ் மக்களின் கரிசனையாக இருக்கிறது.**

1956 ஆண்டில் செய்த "புரட்சியே" காரணம் என்று உரிமை கோரியிருக்கிறார்.

இலங்கையின் முக்கியமான அரசியல் அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொடவின் வார்த்தைகளில் கூறுவதானால் அரசியல் அதிகாரத்தின் வர்க்கத் தளங்கள் கொழும்பை மையமாகக்கொண்டு வாழும் மேற்கத்தைய பாணி வாழ்க்கை முறையைக் கொண்ட சிறுபான்மையினரான உயர் குடியினரிடம் இருந்து சாதாரண சமூக சக்திகளுக்கு மாறியிருக்கிறது. ஜனநாயகத்தின் ஊடாக நிறுவனமயப்படுத்தப்பட்டிருந்த அரசியல் அதிகாரத்தின் வர்க்க ஏகபோகம் அதே ஜனநாயகத்தினால் தகர்க்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இலங்கையில் முதற்தடவையாக மார்க்சியவாதி ஒருவர் ஆட்சியதிகாரத்துக்கு வந்திருப்பதாக வர்ணிக்கப்படுகிறது. பாரம்பரிய அர்த்தத்திலான மார்க்சியவாதியாக திசாநாயக்கவை இன்று நோக்கமுடியாது. பத்து வருடங்களுக்கு முன்னர் ஜே.வி.பி.யின் தலைவராக வந்த பிறகு அவர் முன்னைய போக்குகளில் இருந்து பெரிதும் வேறுபட்ட முறையிலேயே கட்சியை வழி நடத்தி வந்திருக்கிறார். ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இன்று ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கிறது என்றால் திசாநாயக்க கட்சியின் போக்குகளில் செய்த மாற்றங்கள் அதற்கு முக்கிய காரணம்.

தெற்காசியாவில் நேபாளத்திற்கு பிறகு இடதுசாரி தலைவர் ஒருவரை அரசாங்க தலைவராக தெரிவு செய்த நாடாக இலங்கை விளங்குகிறது. உலகின் ஒரேயொரு இந்து இராச்சியமாக விளங்கிய நேபாளத்தில் முடியாட்சியை முடிவுக்கு கொண்டுவந்த மாவோவாத கம்யூனிஸ்ட் ஆயுதக்கிளர்ச்சிக்கு தலைமை தாங்கிய பிரசண்டா முதற் தடவையாக 2008 ஆம் ஆண்டில் பிரதமராக பதவியேற்றார். இதுவரையான 18 வருடங்களில் அவர் மூன்று தடவைகள் பிரதமராக பதவிக்கு வந்தார். இப்போதும் அவரே பிரதமராக இருக்கிறார்.

மாவோவாதியான பிரசண்டாவும் அவரது கம்யூனிஸ்ட் கட்சியும் ஆட்சியதிகாரத்தில் இருந்துவந்த காலப்பகுதியில் அவர்களின் அணுகுமுறைகளில் ஏற்பட்ட மாற்றம் அவர்களை நேபாளத்தின் ஏனைய தாராளவாத முதலாளித்துவ கட்சிகளில் இருந்து பெருமளவுக்கு வேறுபடுத்திப் பார்க்கமுடியாத நிலையை உருவாக்கி விட்டது என்று அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

இலங்கையில் திசாநாயக்கவின் தலைமையில் ஜே.வி.பி. ஏற்கெனவே ஒரு இடதுசாரிப் போக்கில் இருந்து பெருமளவுக்கு விடுபடத் தொடங்கி விட்டது. தீவிர வலதுசாரியான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த இரு வருடங்களாக சர்வதேச நாணய நிதியத்தின் [illegible]லின் கீழ் முன்னெடுத்து வந்த பொருளாதார மறுசீரமைப்பு திட்டத்தை தொடருவதாக உறுதியளிக்கின்ற அளவுக்கு தேசிய மக்கள் சக்தி மாறுதலுக்கு உள்ளாகியிருக்கிறது.

ஜே.வி.பி.யின் கடந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டு எதிரணியினரால் முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்களுக்கு பதிலளிக்கும் வேளைகளில் எல்லாம் திசாநாயக்க அடிப்படைக் கொள்கைகளை கைவிடவில்லை என்ற போதிலும் தற்போதைய சர்வதேச நிலைவரங்களுக்கு ஏற்ற முறையில் தங்களது அணுகுமுறைகளில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது என்று கூறிவந்திருக்கிறார். உலகில் ஒரு சோசலிச முகாம் இல்லாத காரணத்தால் இந்த மாற்றங்கள் தவிர்க்கமுடியாதவை என்றும் அவர் விளக்கமளித்தார்.

பொருளாதார நெருக்கடி உட்பட தாங்கள் எதிர்நோக்கும் பெருவாரியான பிரச்சினைகளுக்கு பாரம்பரிய அரசியல் சக்திகளின் தவறான ஆட்சிமுறையே காரணம் என்பதை விளங்கிக் கொண்ட மக்கள் மத்தியில் பொது வாழ்வை தூய்மைப்படுத்துவது குறித்து திசாநாயக்க அளித்த உறுதிமொழி பெரும் வர வேற்பை பெற்றது. ஊழலுக்கு எதிரான அவரின் செய்தியும் புதியதொரு அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கப்போவதாக அளித்த வாக்குறுதியும் முறைமை மாற்றம் ஒன்றை வேண்டி நின்ற இளம் வாக்காளர்களுக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தன.

நீண்டகாலமாக பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காவிட்டாலும் கூட பழைய பிரதான அரசியல் கட்சிகளையே மாறிமாறி ஆட்சிக்கு கொண்டுவந்து சலித்துப்போன மக்கள் இரு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பநிலைக்கு பிறகு பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்துக்கு வெளியில் உள்ள ஒருவரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதில் காட்டிய ஆர்வத்தை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டின. உண்மையில் இது மக்கள் செய்து பார்க்கத்துணிந்த ஒரு பரிசோதனையே என்பதில் சந்தேகமில்லை.

பாரம்பரிய அதிகார வர்க்கத்தின் மீது கடுமையாக வெறுப்படைந்த மக்கள் மாற்றத்துக்கான " வேட்பாளராக திசாநாயக்காவை நோக்கினார்கள். கடந்த இரு வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவாக தன்னால் சாதிக்க முடிந்ததாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரசாரப்படுத்திய " உறுதிப்பாட்டையும் வழமை நிலையையும் " அனுபவிக்கக் கூடியவர்களாக இருந்த பிரிவினரே அவருக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு விக்கிரமசிங்க தனது பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் மாத்திரம் முழுமையாக தங்கியிருந்தது அவரின் தந்திரோபாயங்களில் இருந்த மிகப்பெரிய குறைபாடாகும். நீண்ட கால அரசியல் அனுபவத்தையும் வளமான அறிவையும் கொண்ட அவருக்கு நாடு அண்மைக்காலமாக எதிர்நோக்கி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் மக்கள் பொருளாதாரக் காரணியை மாத்திரம் மனதிற்கொண்டு வாக்களிக்கப் போவதில்லை என்பது தெரிந்திருக்கவில்லை.

பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடும் ஆர்வத்தில் மக்கள் இதுகால வரையான தவறான ஆட்சிமுறை, குடும்ப

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உச்சத்தில் விலைவாசி, ஏழையாகும் நடுத்தர வர்க்கத்தினர்: இலங்கை பொருளாதாரத்தை அநுர மேம்படுத்துவாரா?

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க பதவியேற்றிருக்கும் நிலையில், அவருக்கு முன்பாகப் பல சவால்கள் காத்திருக்கின்றன.

புதிய ஜனாதிபதி மீது மக்கள் பெரும் நம்பிக்கையையும், பெரும் எதிர்பார்ப்பையும் வைத்திருக்கும் நிலையில், அவர் முன்பாக இருக்கும் பொருளாதார ரீதியிலான சவால்கள், மிகக் கடுமையானவை.

சிக்கலான பொருளாதார நிலையில் உள்ள இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றிருக்கும் அநுர குமார திஸாநாயக்கவின் முன்னிருக்கும் பொருளாதார சவால்கள் என்னென்ன? அதனை அவர் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்?

2022-ஆம் ஆண்டில் இலங்கை மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க நேர்ந்தது. அந்நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு வெகுவாகக் குறைந்ததால், பெட்ரோல் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைக்கூட இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் நாடு முழுவதும் பொதுமக்கள் பெட்ரோல், மண்ணெண்ணெய், எரிவாயு உருளைகளுக்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டியிருந்தது.

இதையடுத்து ஏற்பட்ட மக்கள் போராட்டத்திற்குப் பிறகு, ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஸ பதவி விலகி, இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றார்.

இதைத் தொடர்ந்து அந்நாடு சர்வதேச நிதியத்துடன் (ஐ.எம்.எஃப்) பேச்சு வார்த்தைகளை நடத்த ஆரம்பித்தது. முடிவில் 2023-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 பில்லியன் அமெரிக்க டாலர்களை கடனாக வழங்கச் சர்வதேச நிதியம் ஒப்புதல் அளித்தது. இதற்காகச் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அதன்படி வரிகள், கட்டணங்கள் ஆகியவை பெரிய அளவில் உயர்த்தப்பட்டன.


கடனுதவிக்குப் பிறகு, பெட்ரோல் போன்ற பொருட்களுக்கு இருந்த தட் டுப்பாடு நீங்கியது என்றாலும், விலை வாசி உயர்வும் கட்டண உயர்வுகளும் தாங்க முடியாத உயரத்தை எட்டின.

**உச்சத்தில் விலைவாசி**

ஐ.எம்.எஃப்-இன் கடன் மீட்சித் திட் டத்திற்குப் பிறகு, இலங்கைப் பொருளா தாரம் சிறிய அளவில் மேம்பட்டிருக்கி றது. நெருக்கடியின் உச்சத்தில் 70 வீதம் அளவுக்கு இருந்த பணவீக்கம் இப்போது வெகுவாகக் குறைந்திருக்கிறது.

2022-ஆம் ஆண்டில் - 7.3 வீதம் ஆக இருந்த பொருளாதார வளர்ச்சி, இந்த ஆண்டு - 2.3 வீதம் ஆக உள்ளது. இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியிலிருந்து வெளிப்பட்டு, மேல்நோக்கி பயணிக்கும் என நிபுணர்கள் கருதுகிறார்கள்.

ஆனால், மத்தியதர அடித்தட்டு மக்களைப் பொறுத்தவரை நிலைமை இன்னும் மோசமாகவே நீடிக்கிறது. அத்தியாவசியப் பொருட்களை வாங்க வரிசையில் நிற்கும் நிலை மாறியிருக் கிறது என்றாலும், பொருட்களின் விலைகள் வெகுவாக உயர்ந்திருக்கின் றன. மின் கட்டண உயர்வால், மின் கட்டணத்தைச் செலுத்த முடியாத பல வீடுகளில் மின் இணைப்பு துண்டிக் கப்பட்டிருக்கிறது.



ஆகவே, புதிய ஜனாதிபதியாகத் தேர்வாகியிருக்கும் அநுர குமார திஸா நாயக்கவிற்கு ஒரு சிக்கலான பொருளாதாரத்தைக் கொண்ட இலங்கையே கிடைத்திருக்கிறது. தேர்தல் பிரச்சாரங்களின்போது தான் ஜனாதிபதியானால், சர்வதேச நிதியத்துடன் பேசி வரிவிதிப்பில் சில மாற்றங்களைக் கொண்டுவரப் போவதாகவும் மருந்து, கல்வி, உணவுப் பொருட்கள் மீதான மதிப்புக்கூட்டு வரியை நீக்குவதாகவும் சொல்லிவந்தார்.

இப்போது அவர் ஜனாதிபதியாகியிருக்கும் நிலையில், அரசு உடனடியாக ஏதாவது செய்யும் என்ற எதிர்பார்ப்பும் மக்களிடம் இருக்கிறது. ஆகவே ஒரு சவால் மிகுந்த காலத்தையே எதிர்கொள்கிறார் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க.

"பொருளாதார நெருக்கடியால் 75 வீதம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்"

இது தொடர்பாக பேசிய கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் துறையின் முன்னாள் பேராசிரியரான ஜெயதேவா உய்யங்கொட, சர்வதேச நிதியத்துடனான பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தி, பிற கடன் அளிக்கும் சக்திகளுடன் ஒப்பந்தங்களை முடிவுசெய்ய வேண்டும், என்கிறார்.

"இந்த அரசுக்கு வாக்களித்தவர்களும், வாக்களிக்காதவர்களும் தங்கள் சிரமத்திற்கு ஒரு விடிவை இந்த அரசிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். ஐ.எம்.எஃப் - உடனான ஒப்பந்தம் இந்த மக்களை



நிதி ரீதியாகக் கடுமையாக பாதித்திருக்கிறது. அதனால்தான் ரணில் தோல்வியடைந்தார். ஆகவே, வரிகளைக் குறைக்க அநுர முயற்சியெடுக்க வேண்டும். தேசிய மக்கள் சக்தியிடம் வளர்ச்சிக்கான நீண்ட கால, குறுகிய கால திட்டங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதனைச் செயல்படுத்த வேண்டும்," என்கிறார் ஜெயதேவா.

கடந்த மூன்று ஆண்டுகளில் வறுமை வெகுவாக அதிகரித்திருப்பதைச் சுட்டிக்காட்டும் ஜெயதேவா, இலங்கைக்கு நிறைய அந்நியச் செலாவணி தேவை என்றும், ஆனால் அதற்கான வழிகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன என்கிறார். "அதற்கு, சுற்றுலாவை மேம்படுத்த வேண்டும். அந்நிய முதலீடுகளை ஈர்க்க வேண்டும்," என்றார் அவர்.

மேற்கொண்டு பேசிய ஜெயதேவா, "இலங்கையில் சுமார் 24 வீதம் பேர் ஏழைகளாக இருப்பதாகச் சில புள்ளி விவரங்கள் சொல்கின்றன. 2022-க்குப் பிறகு ஏழைகள் இன்னும் ஏழைகளானார்கள். 2023இற்குப் பிறகு மத்தியதர வர்க்கத்தினரும் ஏழைகளானார்கள். பொருளாதார நெருக்கடியால் சுமார் 75 வீதம் பேர் பாதிக்கப்பட்டார்கள். இது அதிருப்தியை நோக்கி இட்டுச் செல்லும். அரசியல் ரீதியான சவால்களை ஏற்படுத்தும்," என்று மேற்கோள்காட்டினார்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில், பொதுத் துறை நிறுவனங்களை லாபகரமாக்கப் போவதாகவும் புதிதாக ஆசிரியப் பணியில் 20,000 பேரை சேர்த்துக்கொள்ளப் போவதாகவும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தப் போவதாகவும் சமூக நலத் திட்டங்களை விஸ்தரிக்கப்போவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை பெறுமா?**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அமிர்தலிங்கம், ஜனாதிப திக்கு இருக்கும் முதல் சவால் வெளி நாட்டு முதலீடுகளைக் கொண்டுவருவது தான் என்கிறார். "அடுத்ததாக, பொரு ளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண் டும். அரசாங்கம், வணிகர்கள், அதிகாரிகள், மக்கள் வித்தியாசத்தை எதிர்பார்க்கிறார்கள். பணவீக்கத்தைக் குறைக்க வேண்டும்," என்கிறார்.

மேலும், "இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையில் முழு நேர யுத்தம் எந்த நேரத்திலும் ஆரம்பிக்கலாம். பெட்ரோலின் விலை கூடினால் எங்கள் பொருளாதாரம் பாதிக்கப்படும். உள்நாட்டுப் பொருளாதாரமும் சிக்கலான சூழலில் இருக்கிறது," என்கிறார் அமிர்தலிங்கம்.

புதிய ஜனாதிபதி அரசின் நிதி ஒதுக்கீட்டில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்கிறார் கொழும்புவிலிருந்து செயல்படும் சிந்தனைக் குழுவான "சென்டர் ஃபார் ஸ்மார்ட் பியூச்சரின்: செயல் இயக்குநரான இரோமி பெரேரா.

"கடந்த இரண்டு ஆண்டுகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவும் வகையில் அரசு எவ்வித சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும் செயல்படுத்தவில்லை. மின்சாரக் கட்டணங்கள் 2022-2023-இல் வெகுவாக உயர்த்தப்பட்டன. பெரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு மின்சாரம் இணைப்பு துண்டிக்கப்பட்டது. கடன் சுமை வெகுவாக அதிகரித்திருக்கிறது. குழந்தைகளின் கற்றலில் ஏற்பட்ட இழப்பு மிக மோசமாக இருக்கிறது. அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் இதனை எதிர்கொள்ளப் போதுமானவையாக இல்லை. அதற்கு முன்னுரிமை தர வேண்டும்," என்கிறார் இரோமி.

"ஜனாதிபதி முன்பாக சில வாய்ப்புகள் இருக்கின்றன. ஐ.எம்.எஃப் - உடனான பேச்சு வார்த்தைகளை நீங்கள் எப்படி அணுகுகிறீர்கள் என்பது முக்கியம். சரியான நிபுணத்துவம் கொண்டவர்களோடு பேச ஐ.எம்.எஃப்-உம் விரும்பும். அப்படிப் பேச்சு வார்த்தை நடத்தினால், வருவாய் இலக்குகளைப் பூர்த்தி செய்வதோடு, முக்கியத் துறைகளுக்கான நிதியை எப்படி ஒதுக்குவது என்பதையும் பார்க்கலாம்," என்கிறார் இரோமி.

இதற்கிடையில், இலங்கையின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கிறது. நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெற்றால் மட்டுமே, புதிய ஜனாதிபதியால் நிர்வாகத்தைச் சுமூகமாக எடுத்துச் செல்ல முடியும்.

"நாடாளுமன்றத் தேர்தலில் ஒவ்வொரு தொகுதியிலும் தகுதியான ஆட்களை நிறுத்தினால் தேசிய மக்கள் சக்தியால் பெரும்பான்மை பெறமுடியும். சிறப்பான ஆலோசகர் குழு ஒன்றை அமைத்து, அதன்படி நடந்தால் எல்லாவற்றையும் கையாள முடியும்," என்கிறார் அமிர்தலிங்கம்.

**அநுரவுக்கு என்ன சிக்கல்?**

ஆனால், தோல்வியடைந்த பிரிவினர் ஒன்றிணைந்து அரசுக்கு நெருக்கடி கொடுக்க முயல்வார்கள் என்ற கருத்தும் இருக்கிறது.

"இது தேசிய மக்கள் சக்திக்கும் தெரியும். ஆனால், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் ஜனாதிபதியாக இருக்கிறார். பொதுவாக நாடாளுமன்றத் தேர்தல்களில், ஜனாதிபதி தேர்தலில் வென்றவர் வெல்வதற்கான வாய்ப்பு அதிகம். இல்லாவிட்டால் சில இடங்களைப் பெற்ற கட்சிகளை வெளியில் இருந்து ஆதரிக்கச் சொல்லலாம்," என்கிறார் ஜெயதேவா.

ஜனாதிபதியான பிறகு நாட்டு மக்களிடம் நிகழ்த்திய முதல் உரையில், "எமக்கு வரலாற்றில் நழுவவிட முடியாத சந்தர்ப்பமொன்று கிடைத்திருக்கிறது," என்று குறிப்பிட்டிருக்கிறார் அநுர குமார திஸாநாயக்க.

சவால்மிக்க இந்தச் சந்தர்ப்பம் குறித்து, அவருக்கு மட்டுமல்ல இலங்கை மக்களுக்கும் பெரும் எதிர்பார்ப்புகள் இருக்கின்றன.

(பிபிசி)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியத்துக்கு வாக்குகள் சேர்ந்ததும் சஜித்துக்கு வாக்குகள் குறைந்ததும் யாரால், எவ்வாறு நிகழ்ந்தது?

பனங்காட்டான்

இலங்கையில் ஏழரை தசாப்தத்துக்கு மேலாக நீயா நானா என்று போட்டி நடத்தி, மாறி மாறி ஆட்சி புரிந்து இனங்களுக்கிடையில் பிளவையும் முறுகலையும் வளர்த்து வந்த சிங்கள தேசிய கட்சிகளுக்கு மக்கள் கட்டாய ஓய்வு கொடுத்துள்ளனர்.

சிங்கள தேசத்தின் ஆரம்ப கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும், சிறீலங்கா சுதந்திர கட்சியும் சில ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டன. இவற்றிலிருந்து உருவான மகிந்தவின் பொதுஜன பெரமுனவும், சஜித் தலைமையில் பிறப்பெடுத்த ஐக்கிய மக்கள் சக்தியும் கடந்த மாத தேர்தலில் நல்ல பாடம் கற்றுள்ளனர்.

இப்போது, சிங்களத் தேசத்தின் பிரகாச நட்சத்திரமாக, முதலாவது மார்க்சிஸ ஜனாதிபதியாக அநுர குமார திசநாயக்க பதவிக்கு வந்துள்ளார். இவரது வெற்றிக்கான அடித்தளத்தை நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே இட்டவர் ரோகண விஜேவீர என்பதை மறந்து விடக்கூடாது. 1982ம் ஆண்டு இடம்பெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன வெற்றி பெற்றபோது ரோகண விஜேவீர மூன்றாம் இடத்துக்கு வந்தவர் என்பது தெரிந்துகொள்ள வேண்டியது.

ஒரேயொரு எம்.பியாக தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் புகுந்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறகலய போராட்டம் கொடுத்த பரிசாக ஜனாதிபதி பதவி கிடைத்தது. அதே அறகலயவின் முகமாக தமது மூன்று எம்.பிக்களுடன் மக்கள் தெரிவில் அநுர குமார ஜனாதிபதியாகியுள்ளார்.

நாட்டின் அரசியல் வரலாற்றில் இதற்கு முன்னர் வெற்றி பெற்ற எட்டு ஜனாதிபதிகளும் முதல் சுற்றிலேயே ஐம்பது வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று கதிரை ஏறினர். ஆனால், ஒன்பதாவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுர குமார விருப்பு வாக்குகளைச் சேர்த்தே ஐம்பது வீதத்தை தாண்டினார்.

கடந்த மாதம்வரை ஜனாதிபதியாக விருந்த ரணில் விக்கிரமசிங்க மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். இது அவருக்குக் கிடைத்த மூன்றாவது தோல்வியும்கூட. 1999ல் சந்திரிகா குமாரதுங்கவிடமும், 2005ல் மகிந்த ராஜபக்சவிடமும் தோல்விகளைச் சுவைத்த இவர், கடந்த மாதம் அநுர குமாரவிடமும் சஜித் பிரேமதாசவிடமும் ஒரே வேளையில் தோல்வி கண்டது வரலாற்றின் பதிவுக்கானது.

இத்தேர்தலில் போட்டியிடத் தவறினால் வரப்போகின்ற நாடாளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்களில் தங்களின் பொதுஜன பெரமுன அநாதையாகி விடக்கூடாது என்பதற்காக தன்னைத் தானே பலிக்கடாவாக்கிய நாமல் ராஜபக்சவின் கட்சி அவரது பிறந்தகமான அம்பாந்தோட்டையிலும், புகுந்தகமான குருநாகலையிலும் படுதோல்வி கண்டுள்ளது.

மூன்று எம்.பிக்களுடன் நாடாளுமன்றத்தில் எதனையும் நிறைவு செய்ய முடியாது என்பதால் அதனை உடனடியாகக் கலைத்து நவம்பர் 14ல் பொதுத்தேர்தலை நடத்துகிறார் அநுர குமார. இத்தேர்தலில் தங்கள் கட்சிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்கு மகிந்தவும் சஜித்தும் ரணிலும் வழிமுறைகளைத் தேடுகின்றனர். சூட்டோடு சூடாக நடத்தும் தேர்தலில் நூறு ஆசனங்களையாவது பெறமுடியுமென அநுர தரப்பு எதிர்பார்க்கிறது.





> 2020 பொதுத்தேர்தலில் வீடு சின்னத்தில் வெற்றிபெற்ற தமிழரசுக் கட்சியின் பத்து எம்.பிக்கள் பெற்ற மொத்த வாக்கு 327,168. ஆனால், நாற்பது நாட்கள் மட்டுமே பரப்புரை செய்த பொதுவேட்பாளர் அரியநேத்திரனுக்கு மக்கள் வழங்கிய வாக்குகள் 226,342. ஒப்பீட்டளவில் பார்க்கின் அரியநேத்திரனுக்கே வெற்றி.

அதேசமயம், இனிமேல் எந்தத் தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லையென ரணில் முடிவெடுத்து விட்டதாக அவரது ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் றுவான் விஜேவர்த்தன அறிவித்துள்ளார். இவர் ரணில் விக்கிரமசிங்கவின் தாய்மாமன் மகன். இவரே ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையை ஏற்கவிருப்பது பற்றி ஏற்கனவே பல தடவை இப்பத்தியில் நான் குறிப்பிட்டுள்ளேன்.

மார்க்சிஸ கொள்கை சார்ந்த புதிய அரசு இயந்திரத்துக்கு இரத்தம் பாய்ச்ச இருக்கும் நாடுகள் எவையெவை என்பதைப் பொறுத்தே இதன் செல்நெறி கண்டுபிடிக்கப்படும். சிலவேளைகளில் இதனால் பெரும் பூதங்கள்கூட அவ்வப்போது தலை காட்டலாம்.

இந்த அரசியல் நெடுஞ்சாலையில் தமிழர் தேசம்இ தமிழ்த் தேசியம் என்ற பெயரால் உருக்குலைக்கப்பட்டு வருகிறது. தமிழர் தரப்பில் ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவது என்று முடிவெடுத்து, அதற்கான வேட்பாளரை தெரிவு செய்வதற்கு முன்னரே தமிழரசுக் கட்சிக்குள்ளிருந்த ஓரிருவர் சன்னதம் கொண்டு ஆடத்தொடங்கினர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு நாற்பது நாட்கள் இருக்கும்போதே பொதுவேட்பாளராக தமிழரசுக் கட்சியின் முன்னாள் எம்.பியான பா.அரியநேத்திரன் தெரிவானார். அதற்கு முன்னராகவே சாணக்கியனைத் தம்முடன் இணைத்துக் கொண்ட சுமந்திரன் பொதுவேட்பாளரைத் தோற்கடிப்பேன் என்று சூளுரைக்க ஆரம்பித்தார். இங்குதான் தமிழரசுக் கட்சி மூன்றானது. சுமந்திரன் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க, சிவஞானம் சிறீதரன் அரியநேத்திரனுக்கு ஆதரவு வழங்க, கட்சியின் துணைத்தலைவர் சீ.வீ.சிவஞானம் இடைநடுவில் நின்று அவரவர் விரும்பியவாறு மக்கள் வாக்களிக்க அனுமதிக்க வேண்டுமென்றார். தப்புக் கணக்குகளைக் காட்டி சஜித் தரப்புக்கே கட்சியின் மத்திய குழு ஆதரவாக முடிவெடுத்ததென அறிக்கைவிட்ட சுமந்திரன், சஜித்துக்கு ஆதரவாக அவரது கூட்டத்திலும் மேடையேறி தமிழரசின் இழுபறியை சந்தியில் ஏற்றினார்.

பொதுவேட்பாளராக தாம் போட்டியிடுவது பற்றி ஊடக செவ்வியொன்றில் அவ்வேளை அரியநேத்திரன் தெரிவித்த கருத்து பின்வருமாறு அமைந்திருந்தது:

"நான் பொதுவேட்பாளராக வந்ததன் நோக்கம், தந்தை செல்வாவின் கொள்கையின்பால் - தந்த செல்வா என்ன நோக்கத்திற்காக இந்த கட்சியை உருவாக்கினாரோ அவருடைய நோக்கத்தின் அடிப்படையில்தான் நான் பொது வேட்பாளராக களமிறங்கியதை பார்க்கிறேன். அதேபோல், இதனை தமிழரசு கட்சிக்கு கிடைத்த பெருமையாகத்தான் நான் பார்க்கின்றேன். தமிழரசு கட்சி என்ன நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் இந்த பொது வேட்பாளர் விடயத்திலும் இருக்கிறது என்பதை உணர்ந்தே இந்த தெரிவுக்கு நான் விரும்பி சம்மதித்தேன். கட்சிக்கு எதிராக வழக்கு போட்டவர்கள்கூட இன்னும் கட்சிக்குள் இருந்துகொண்டு கட்சியின் செயற்பாடுகளில் கலந்து கொள்கிறார்கள். அதேபோல், கட்சியை பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய அரசியல் முன்னெடுப்புகளை முன்னெடுக்கிறார்கள். கட்சியை சிதைத்தவர்களிடத்தில் எந்த விளக்கமும் கோராமல், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டு விட்டு தமிழ் தேசியத்துக்காக களமிறங்கியிருக்கும் என்னிடத்தில் விளக்கம் கோருகிறார்கள் என்றால் அவர்களுடைய திட்டம், மனநிலை எப்படிப்பட்டது என்பதை மக்கள்தான் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள்தான் (மக்கள்) இதற்கு தக்க பதிலை வழங்க வேண்டும்" என்று அரியநேத்திரன் தெரிவித்திருந்தார்.

திரு. அரியநேத்திரன் தெரிவித்ததை சரியாகப் புரிந்து கொண்ட மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் அவர் கேட்டவாறு பதிலை வழங்கியுள்ளனர். இதற்கான உதாரணமாக சில புள்ளிவிபரங்களுடன் ஒப்பீடுகளைத் தருவது இதனை மேலும் புரிந்து கொள்வதற்கு இலகுவானது.

கடைசியாக இடம்பெற்ற 2020 ஆகஸ்ட் மாத பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்தில் போட்டியிட்டவர்களில் ஒன்பது பேர் வெற்றி பெற்றனர். தேசியப் பட்டியலும் சேர்த்து பத்து இடங்கள் கிடைத்தன. வடக்கிலும் கிழக்கிலும் இவர்கள் பெற்ற மொத்த வாக்குகள் 327,168.

கடந்த மாத ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேத்திரனுக்கு வடக்கிலும் கிழக்கிலும் கிடைத்த மொத்த வாக்குகள் 226,342. தமிழரசின் பத்துப் பேர் பெற்றிருந்த 327,168 வாக்குகளுடன் ஒப்பிடுகையில் அரியநேத்திரனுக்குக் கிடைத்த 226,342 வாக்குகள் அதிகமானவை. தமிழ்த் தேசிய சிந்தனையில் வாழும் வடகிழக்கு மக்கள் பொது வேட்பாளரை ஒரு குறியின் அடையாளமாகப் பார்த்து வாக்குகளை வழங்கியுள்ளனர் என்பதை இதனூடாக காணமுடிகிறது.

அரியநேத்திரனை தோற்கடித்தே தீருவேன் என்று தனிப்பட்ட கோபத்தில் பழி வாங்குவதுபோல் முழங்கி வந்த சுமந்திரனின் வடமராட்சியிலுள்ள பருத்தித்துறை, உடுப்பிட்டி ஆகிய இரண்டு தொகுதிகளிலும் அரியநேத்திரனுக்கு பெருமளவு வாக்குகளை அளித்து

> 2019 ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு வடக்கு கிழக்கில் கிடைத்த வாக்குகள் சுமார் 11 லட்சம். சுமந்திரன் விடுத்த வேண்டுகோளினால் இம்முறை வடக்கு கிழக்கில் கிடைத்த வாக்குகள் சுமார் 6 லட்சத்து 70 ஆயிரம் மட்டுமே. ஏறத்தாழ சஜித்துக்கு ஐம்பது வீதத்தை குறைத்துவிட்ட சாதனையாளர் யார்?

முதலிடத்துக்கு இழுத்து வந்ததன் மூலம் அப்பகுதி மக்கள் சுமந்திரனின் முகத்தில் கரி பூசியுள்ளனர்.


2019 ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு வடக்கிலும் கிழக்கிலும் 11 லட்சம் வரையான மக்கள் வாக்களித்தனர். கடந்த மாத தேர்தலில் இங்கு சஜித்துக்கு 6.7 லட்சம் வாக்குகளே கிடைத்தன. சுமந்திரனின் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2009ல் சஜித்துக்கு மூன்று லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்தன. கடந்த மாத தேர்தலில் இங்கு ஒரு லட்சத்து 21 ஆயிரம் வாக்குகளே கிடைத்தன. தமிழர் தாயகத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இம்முறை சஜித்துக்கு இறங்குமுகமே. ஆனால், தங்கள் வேண்டுகோளை ஏற்று சஜித்துக்கு தமிழ் மக்கள் பெருமளவு வாக்களித்தமைக்காக நன்றி கூறும் அறிக்கையை வெளியிட்டு சுமந்திரன் தமக்குத் தாமே முதுகைத் தடவிக் கொண்டார்.

தனியொருவரின் ஆட்டத்தால் தமிழரசுக் கட்சி தன்னிலை மறந்து, கொள்கை துறந்து நொடிந்து போயுள்ள இன்றைய நிலையில் அதன் மூத்த தலைவர் ஒருவர் மனம் நொருங்கியவாறு கருத்துரைக்கும் ஒளிநாடா ஒன்று பல லட்சம் மக்கள் பார்வைக்கு உலகம் சுற்றி வருகிறது.

அந்தத் தலைவரின் சொல்லாடலை அச்சொட்டாக இங்கு குறிப்பிட விரும்பவில்லை. அதன் சில பகுதி இவ்வாறு பின்வருமாறு அமைந்துள்ளது: காலமான பெரியவரை "கு.....போவான்" என்றும், இப்போதைய பெரியவரை "அ..... போவான்" என்றும், கட்சியைப் பிளக்கும் கோடரிக் காம்பை "பிசாசு" என்றும் அவர் குறிப்பிட்டிருப்பதன் ஊடாக தமிழரசுக் கட்சியின் பரிசு கெட்ட இன்றைய நிலைவரத்தை புரியமுடிகிறது. இதைச் சொன்னவரின் நெஞ்சுரத்தை வாழ்த்துவோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை: புதிய அதிபரும் பொறுப்புகளும்!



இலங்கையின் புதிய அதிபராக தேசிய மக்கள் சக்தி கூட்டணி வேட்பாளரும் ஜனதா விமுக்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி - ஜேவிபி) என்கிற இடதுசாரிக் கட்சியின் தலைவரு மான அநுரகுமார திசாநாயக்க தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். இலங்கை அரசியல் வரலாற்றில், அதிபர் தேர்தலில் ஓர் இடதுசாரிக் கட்சி வெற்றிபெறுவது இதுவே முதன்முறை. அதேபோல், அக்கட்சியைச் சேர்ந்த ஹரிணி அமர சூரிய புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். இதன் மூலம் அந்நாட் டின் மூன்றாவது பெண் பிரதமர் என்கிற பெருமை அவருக்குக் கிடைத்திருக்கிறது. இந்த நகர்வுகள் நம்பிக்கை அளிப்பது டன், பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கும் வித்திட்டிருக்கின்றன.

இலங்கையில் 2009 இறுதிக்கட்டப் போருக்குப் பிறகு, அங்கு உறுதியில்லாப் பொருளாதார நிலை நீடித்துவருகிறது. கொரோனா பொதுமுடக்கம், ராஜபக்ச குடும்ப ஆட்சியின் மோசமான நிர்வா கம், சிங்கள பௌத்த தேசியவாதம் எனப் பல்வேறு காரணிகளால் இலங்கை பெரும் பின்னடைவைச் சந்தித்தது சம கால வரலாறு. அந்தக் காலக்கட்டத்தில் நடந்த மக்கள் போராட்டம் அதிபர் மாளிகையின் கதவுகளைத் தகர்த்து எறிவதுவரை சென்றது. இந்தப் போராட் டங்களை முன்னெடுத்ததில் அநுரகுமார திசாநாயக்கவின் பங்கு மிக முக்கியமானது.

இலங்கையின் வளர்ச்சித் திட்டங் களில் இந்தியா, சீனா போன்ற நாடு களின் பங்கு அதிகமாக இருந்தது. இது ஒருவகையில் தெற்காசியப் பிராந்தியத் தின் ஆளுமைப் போட்டியின் ஒரு பகுதியாகச் சர்வதேச அரங்கில் பார்க்கப்பட்டது. அதேபோல், தள்ளாடிக்கொண்டிருந்த இலங்கைப் பொருளாதாரத்தை மீட்பதில் இந்தியா கணிசமான உதவியை நல்கியது.

இந்தச் சூழலில், புதிய அதிபராகப் பொறுப்பேற்றுள்ள அநுரகுமாரவின் இந்தியாவுடனான உறவு எப்படி இருக் கும் என்பது கேள்விக்கு உரியதாக இருக்கிறது. விடுதலைப் புலிகள் விவ காரத்தில் ஜேவிபி இந்தியாவைச் சந்தேகித்ததாகச் சொல்லப்படுகிறது. அதுபோல் சுனாமிக்குப் பிறகான பாதிப்புகளைச் சரிசெய்ய சந்திரிகா குமாரதுங்க அரசு முடிவெடுத்தபோது, அதன் கூட்டணிக் கட்சியாக இருந்த ஜேவிபி அதை எதிர்த்தது. அப்போது அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த அனுரகுமார உள்ளிட்ட பலர் அதற்கா கப் பதவி விலகினர். அதுபோல் அதி காரப் பகிர்வு விஷயத்திலும் எதிரான நிலைப்பாட்டையே அவர் கொண்டி ருக்கிறார். மாகாணங்களுக்கான அதி காரப் பகிர்வுக்கு எதிராகவே ஜேவிபி செயல்பட்டதும் மறுக்க முடியா தது.

இந்திய நிறுவனமான அதானி குழும முதலீட்டில் காற்றாலை மின் திட்டத்தை அநுர குமாரவின் ஜேவிபி எதிர்த்து வருவதும் அது நாட்டின் இறையாண் மைக்கு எதிரானது எனப் பிரச்சாரம் செய்வதும் கவனிக்கத்தக்கது. ஆனால், அனுரகுமார விஷயத்தில் இந்தியா இணக்கமாகவே இருக்க முயல்கிறது. அனுரகுமாரவின் இந்தியப் பயணத்தில் இந்திய அரசால் கௌரவமாக அவர் உபசரிக்கப்பட்டார். அதிபரான பிறகு இலங்கைக்கான இந்தியத் தூதர் அநுர குமாரவுக்கு நேரில் தனது வாழ்த்து களைத் தெரிவித்துள்ளார். அதுபோல் பிரதமர் மோடியும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இடதுசாரிக் கட்சி என்கிற நிலையில் சீனாவுடனே உறவைப் பேணக்கூடும் என்கிற பேச்சு நிலவினாலும், அதிபர் என்கிற முறையில் இந்தியாவுடன் சுமுகமான உறவையே எதிர்காலத்தில் அநுரகுமார மேற்கொள்வார் என்றே சர்வதேச அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள். பிராந்திய அளவில் ஒரு சுமுக உறவையே பேண விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, பொருளாதாரச் சரிவை மீட்டெடுப்பது, தெற்காசியப் பிராந்தி யத்தின் சர்வதேச அரசியலைக் கையாள் வது என்பன உள்ளிட்ட பொறுப்புகள் அனுரகுமாரவுக்குக் காத்திருக்கின்றன. கூடவே, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களைக் கட்டுப்படுத்த வேண் டும் என்னும் எதிர்பார்ப்பும் இந்தியத் தரப்பிலிருந்து எழுந்திருக்கிறது. இவற்றை அவர் கையாள்வதில்தான் இலங்கையின் எதிர்காலம் இருக்கிறது எனலாம்.

(தி இந்து)


# அம்பாறை மாவட்டத்தில் தமிழர் தரப்பில் ஓர் அணியே போட்டியிட வேண்டும்!

வி.ரி. சகாதேவராஜா

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத் தில் தமிழர்கள் தரப்பிலே எந்த கட்சி பேதமும் இன்றி ஒரு அணியே போட்டி யிட வேண்டும் என்ற கருத்து பரவலாக பேசப்பட்டு வருகின்றது. அது சமூக வலைத்தளங்களில் அனைவராலும் பதி விடப்பட்டு வருகின்றது. அது ஏகோபித்த கருத்தாகவும் இருக்கின்றது

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேசரீதியாக அதாவது பொத்துவில் திருக்கோவில் ஆலையடிவேம்பு காரை தீவு சம்மாந்துறை மற்றும் கல்முனை ஆகிய பிரதேசங்களில் மக்கள் மனங்க ளில் இடம்பிடித்த சேவை மனப் பான்மை உள்ள நபர்களை உள்ளடக்கிய ஒரு வேட்பு மனுவை எல்லோரும் சேர்ந்து தயாரித்து போட்டியிடுவது சிறந்தது இதில் கட்சி பேதங்கள் அனைத்தும் இல்லாமல் பொதுவாக களம் இறங்குவது சிறப்பாகும்.

அம்பாறை மாவட்டத்தை பொறுத்த வரை தற்போதைய கள நிலையில் கட்சி சார்பாக பொதுத் தேர்தல் களம் இறங்கு வது மிகவும் பின்னடைவை ஏற்படுத் தும். ஏனெனில் எங்களது கட்சிக்குள்ளே பல்வேறு பட்ட பிரிவுகள் காணப்படு வதுடன் ஏனைய கட்சிகளும் வெவ்வேறு சின்னங்களில் போட்டியிட்டால் எங்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும். எனவே அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து பொது வான ஒரு கட்டமைப்பின் கீழ் போட்டி யிடுவது மிகவும் சாலச் சிறந்தது. எனவே அனைத்து அமைப்புகளையும் மிக விரைவாக ஒன்று கூட்டி ஒரு கட்ட மைப்பை உருவாக்கி அனைத்து கட்சி களும் பொது அமைப்புகளும் ஒன்றி



ணைந்த ஒரு கட்சியாக ஒரு சின்னத்தில் போட்டியிட்டு அது கூடிய வாக்குகளை பெற்று தற்பொழுது உள்ள அரசாங்கத்தி லும் பங்காளியாக எமது பிரதேசத்திற் கான உரிமைகளை வென்றெடுக்க வேண்டியதுதான் தற்பொழுது உள்ள ஒரே வழி .

இதனை விடுத்து தனித்தனியாக பிரிந்து செல்வோமானால் எங்களை கடவுளால் கூட காப்பாற்ற முடியாது.

அம்பாறையில் கடந்த தேர்தலில் தமிழ்மக்கள் அன்னளவாக 75000 வாக்கு கள் அளித்தும் பிரதிநிதித்துவம் இழக் கப்பட்டது.

கருணா - 30000

ரிஎன்ஏ - 25000

ஏனைய உதிரி கட்சிகள் பெரும் பான்மை கட்சிகளுக்கு 20000 வழங் கப்பட்டிருந்தது.

அம்பாறையில் பிரதிநிதித்துவம் பாதுகாக்க கட்சிகள் கொள்கைகளுக்கு அப்பால் ஒரு பொது உடன்படிக்கை களில் காட்சிகளுக்கான செல்வாக்கின் அடிப்படையில் வேட்பாளர்கள் பங்கிடப்பட்டு பொதுவான சின்னத்தில் போட்டியிட வேண்டும்.

இதற்காக புத்திஜீவிகள், சிவில் அமைப்புகள், சமய, சமூக நிறுவனங்கள் இளைஞர்கள் ஒன்றுபட்டு பாடுப டவேண்டும் இவ்வாறு முயற்சித்தால் இரண்டு பிரதிநிதித்துவம் கிடைக்கவும் வாய்ப்பாக அமையும்.

வடக்கில் பெரும்பான்மை எப்படியோ தமிழரே எவ்வாறு வாக்குகள் சிதறினாலும் கிடைப்பது தமிழ் பிரதிநிதித்துவமே.

கிழக்கில் நிலமை வேறு அம்பாறை, திருகோணமலையில் கட்சி பேதங்கள் மறந்து ஒன்றுபட்டு பயனிக்கவேண்டி யது காலத்தின் கட்டாயம். எதிர்வரும் பொது தேர்தல் அம்பாறை மாவட்டத்து தமிழ் மக்களுக்கு சவால் மிக்கதாக இருக்க போகிறது. இம்முறையும் பிரதிநிதித்துவத்தை இழக்க வேண்டி வருமா ? அதற்கு இடமளிக்க முடியாது.

அண்ணளவாக 90 - ஒரு லட்சம் வரையான தமிழ் வாக்காளர்கள் அம்பாறை மாவட்டத்தில் உள்ளனர். 40,000 வாக்குகளுக்கு மேல் பெற்றால் தான் ஒரு ஆசனத்தை பெற முடியும்.

கடந்த முறை தமிழ் வாக்குகள் இரண்டாக பிரிந்தது, வர போகும் தேர்தலில் 3 ஆக, 4 ஆக பிரிந்து போக வாய்ப்பு உள்ளது.

ஆகவே... வேட்பாளர் தெரிவில் கூடுதல் கவனம் செலுத்தி சரியான, தகுதியான, இளம் வேட்பாளர்கள் களமிறக்க பட வேண்டும். இல்லையேல் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் அரசியல் அநாதையாக இருக்க வேண்டி யதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைவர்களின் தேர்தல்கால கூட்டுக்கள் யாருக்கானவை?

கந்தையா அருந்தவபாலன்



அரசியலில் கட்சிகள் கூட்டுச் சேருதல், பிரிதல், மீண்டும் வேறு கட்சிகளுடன் சேருதல் என்பவை இயல்பானவை. அதிலும் தேர்தல் காலத்தில் இதனை அதிகளவில் நாம் எதிர்பார்க்க முடியும். ஜனநாயக நாடொன்றில் கட்சிகளின் பிரதான நோக்கம் தேர்தலில் வெற்றி பெறுவதன்மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக இருந்தாலும் வேறு நோக்கங்களுக்காகவும் கட்சிகள் கூட்டுச் சேர்வதை அவதானிக்க முடியும். குறிப்பாக ஆளுங்கட்சியொன்றின் ஜனநாயக மீறல்களுக்கு எதிராக எதிர்கட்சிகள் ஒன்றுசேர்வது பல நாடுகளில் இன்று நிகழ்ந்து வருகிறது. வடக்குக் கிழக்கு அரசியல் கட்சிகளைப் பொறுத்த மட்டில் இரண்டுவகையான கூட்டுக்கள் இடம்பெற்று வருகின்றன. ஒன்று தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான கூட்டுக்கள். இரண்டாவது தமிழ்க்கட்சிகளுக்கும் தேசிய சிங்களக் கட்சிகளுக்கும் இடையிலான கூட்டுகள். இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில்தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் நிகழ்ந்த இரண்டு கூட்டுக்கள் முக்கியமானவையாக கருதப்படுகின்றன. தமிழர்களின் அரசியல் வரலாற்றில் அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்திய இக்கூட்டுகளில் ஒன்று 1971 இலும் மற்றது 2001 இலும் நிகழ்ந்தது. முதலாவது கூட்டு கீரியும் பாம்பும் போல அதுவரை செயற்பட்டுவந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் இலங்கைத் தமிழரசுக்கட்சியும் 1971 இல் ஒன்றிணைந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாகத் (ரியுஎல்எவ்)தோற்றம் பெற்றது. இக்கூட்டில் தொடக்கத்தில் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இணைந்து கொண்டாலும் பின்னர் அது அக்கூட்டிலிருந்து சிறிது காலத்தில் விலகிவிட்டது. பின்னர் குமார் பொன்னம்பலத்தின் காலத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் வெளியேறிவிட்டது. இரண்டாவது கூட்டு யுத்தகாலத்தில் குறிப்பாக தமிழர் தாயகத்தின் பெரும்பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்தபோது 2001 இல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய நான்கு கட்சிகள் ஒன்று சேர்ந்து உருவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ரிஎன்ஏ).

1971 இல் இரு பிரதான தமிழ்க்கட்சிகளின் கூட்டாக உருவான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி இப்போது பெயரளவிலான ஒரு கட்சியாக அதன் செயலாளரான ஆனந்தசங்கரியின் கீழ் இருந்தாலும் 1976 இல் அக்கூட்டணி வட்டுக் கோட்டையில் எடுத்த தனிநாட்டுத் தீர்மானந்தான் தமிழர் வரலாற்றில் மட்டுமன்றி இலங்கையின் வரலாற்றிலும் பாரிய மாற்றங்களுக்கு அடிப்படையாக இருந்தது. இத்தீர்மானத்தையும் அதன்பின்னரான தலைவர்களின் உரைகளையும் வேதவாக்காக கொண்ட இளைஞர்கள் அதனை அடைவதற்காக ஆயுதமேந்தினர். ஆயுதப் போராட்டத்தின் பிரமாண்டமான வளர்ச்சியும் 2009 இல் அதன் முடிவும் நாம் அறிந்த ஒன்றே. ஆனால் தலைவர்களோ 1977 ஆம் ஆண்டில் நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்களிடையே ஓர் எழுச்சியை உருவாக்கி அதனை அத்தேர்தலில் வாக்குகளாக அறுவடை செய்வதை நோக்கமாகக் கொண்டே அத்தீர்மானத்தை எடுத்திருந்தனர் என்பதை அதன் பின்னரான அவர்களின் நடத்தைகள் வெளிப்படுத்தி நின்றன. அத்தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 18 ( மொத்தம் 165) ஆசனங்களைக் கைப்பற்றியதுடன் அது வரலாற்றில் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் ஆகும் வாய்ப்பையும் வழங்கியது. ஆனால் அத்தேர்தலில் அக்கட்சி முன்வைத்த தனிநாட்டுத் தீர்மானம் தொடர்பான திட்டமோ வழிவரைபடமோ அதன் தலைவர்களிடம் இருக்கவில்லை. தனிநாட்டுக் கோரிக்கையை மக்கள் முன்வைத்து தேர்தல்மூலம் அங்கீகாரம் பெற்ற அவர்கள் மாவட்ட அபிவிருத்திச்சபைகளைப் பெறுவதற்குத் தயாராகினர். அதுமட்டுமன்றி தேர்தலையே நோக்காகக் கொண்டு அவர்களால் முன்வைக்கப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கையை உண்மையென ஏற்று இயங்கத் தொடங்கிய இளைஞர்களுக்கு எதிரான செயற்பாடுகளிலும் அவர்கள் இறங்கத் தயங்கவில்லை. அதனால் அவர்கள் தமிழர் அரசியலிலிருந்து மட்டுமல்ல சிலர் உலகிலிருந்தும் அப்புறப்படுத்தப்பட்டதையும் மக்கள் அறிவர்.

2001 இல் நான்கு கட்சிகள் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியபோது இருந்த அரசியல் களச்சூழ்நிலை முன்பைவிட முற்றிலும் வேறானது. அந்நேரத்தில் ஆயுதப் போராட்டம் உச்சம் பெற்றிருந்ததுடன் அதனை விடுதலைப்புலிகள் தனித்து தம்வசமாக்க வைத்திருந்ததுடன் ஈ.பி.ஆர். எல்.எவ், ரெலோ போன்ற இயக்கங்கள் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு பெயரளவிலான அரசியல் இயக்கங்களாக இருந்தன. புளொட்டும் ஈ.பி.டி.பியும் தொடர்ந்து அரச ஆதரவுக் குழுக்களாகவே இயங்கி வந்தன. இந்தச் சூழ்நிலையில்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கான கரு கிழக்கில் உருவானது. உண்மையில் இக்கூட்டின் உருவாக்கத்தில் விடுதலைப் புலிகளின் பங்கு இருக்கவில்லை எனினும் அதை அவர்கள் அனுமதித்திருந்தனர். அதுமட்டுமன்றி அக்கூட்டணி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. 2001 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அக்கூட்டணி 15 ஆசனங்களைக் கைப்பற்றியது. பின்னர் 2004 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் விடுதலைப் புலிகளின் வழிகாட்டுதலின் கீழ் போட்டியிட்டு அதிஉச்சமாக 22 ஆசனங்களை அது கைப்பற்றியது. அதன்பின்னர் அக்கூட்டணிக் கட்சி விடுதலைப் புலிகளின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் இயங்கியதுடன் அதனை தமக்கான ஜனநாயக முகமாக விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தேர்தலை அடிப்படையாக்க் கொண்ட ஒரு அரசியல் கட்சிகளின் கூட்டு என்றாலும் அதனை விடுதலைப்புலிகள் மக்களின் எழுச்சிக்கும், தமது போராட்டுத்துக்கான நியாயப்பாட்டை நிறுவுவதற்குமான ஒரு கருவியாக கையாண்டனர் என்பதே உண்மை. ஆயுதப் போராட்ட காலத்தில் அதன் பங்களிப்பு வரையறைக்கப்பட்டிருந்தாலும் 2009இன் பின்னர் தமிழ்மக்களின் உரிமைகளை நோக்கிய அரசியலுக்கான முழுப்பொறுப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமே வந்து சேர்ந்தது. ஆனால் அப்பொறுப்பைச் சரிவர உணராது தலைவர்கள் தன்னிச்சையாகச் செயற்பட்டதன் விளைவு இன்று தமிழர்களின் அரசியல் நடுச்சந்தியில் வந்து நிற்கிறது.

> **தமிழரசுக்கட்சியின் உத்தியோகபூர்வமானவர்கள் தாங்கள்தான் எனக்கூறும் இன்னொரு அணியின் தலைவரான சுமந்திரன் தேர்தல்கூட்டுத் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.**

தேன்கூடு போல சிரமப்பட்டு உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கல்லெறிந்து உடைப்பது போல உடைந்தவர்கள்அல்லது அதற்குத் துணைபோனவர்கள் சிலர் இன்று மீண்டும் ஒற்றுமை, கூட்டு என்று கதையளக்கத் தொடங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது. அண்மையில் தமிழரசுக்கட்சியின் தலைவராக இன்னும் நீடிக்கின்ற மாவை சேனாதிராசாவை சந்தித்த தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இக்கூட்டை வலியுறுத்தியாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேபோல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி புதியகூட்டொன்றை அமைத்து தாங்கள்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று கூறிவரும் கட்சித்தலைவர்கள் சிலரும் மாவை சேனாதிராசாவைச் சந்தித்து இதுபோன்றதொரு கோரிக்கையை முன்வைத்ததாகத் தெரிகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் வெளியேறக் காரணமான தரப்புகளில் ஒருபகுதியினர் முன்னரைப்போல் தங்களுடன் வந்து இணையும்படி கோரிக்கை விடுக்கின்றனர். வெளியேறியவர்களோ அது சரிவராது தாங்கள்தான் உண்மையான கூட்டமைப்பு என்றும், விரும்பினால் தங்களுடன் வந்து இணையுமாறும் கூறுகின்றனர். அப்படியானால் இவர்கள் இப்போது விரும்பும் ஒற்றுமை, கூட்டு என்பன யாருக்கானது? மக்களுக்கானதா அல்லது தமக்கானதா?

மறுபுறத்தில் தமிழரசுக்கட்சியின் உத்தியோகபூர்வமானவர்கள் தாங்கள்தான் எனக்கூறும் இன்னொரு அணியின் தலைவரான சுமந்திரன் தேர்தல்கூட்டுத் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். வடக்குக் கிழக்கில் மட்டும் தேர்தலில் பங்கெடுத்துவரும் தமிழரசுக்கட்சி தென்னிலங்கைக் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டிய தேவை என்ன? சிதறிக்கிடக்கும் தமிழ்மக்களை ஒன்று திரட்டி அவர்களுக்கான நாடாளுமன்ற ஆசனங்களை தென்னிலங்கைக் கட்சிகளுக்கோ அல்லது அக்கட்சிகளின் தமிழ் தரகர்களுக்கோ செல்வதைத் தடுக்க வேண்டிய பொறுப்புடைய ஒருகட்சி இவ்வாறு தென்னிலங்கைக் கட்சியொன்றுடன் பேச்சுவார்த்தையில் இறங்கியிருப்பதன் பின்னால் வேறு நோக்கங்களும் இருக்கக்கூடும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளரை எதிர்த்து சஜித்துக்கு ஆதரவாக வேலைசெய்த சுமந்திரன், சஜித் வெல்வதற்கான வாய்ப்பு உள்ளதென்றும் அதனால் அவரது வெற்றிக்கு ஆதரவு வழங்குவதன்மூலம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றைப் பெறமுடியும் என்றும் அதற்கான வாதத்தை முன்வைத்திருந்தார். வழமையாக அவர் முன்வைக்கும் ஒரு வாதந்தான் என்றாலும் எதிர்பார்ப்பின் அடிப்படையில் அதிலும் ஒரு நியாயம் இருந்தது. ஆனால் இன்று தேசிய மக்கள் சக்தியின் அனுரகுமார திசநாயக ஆட்சியதிகாரத்தைப் பெற்றுள்ளார். சுமந்திரன் முன்வைத்த வாதத்தின்படி பார்த்தால் நாடாளுமன்றத்தில் அனுரவின் கட்சியைப் பலப்படுத்துவதன் மூலமே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெறமுடியும். அதன்படி தேசிய மக்கள் சக்தியுடன்தான் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும். சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தைக் கைப்பற்றுவதாலோ அல்லது அதிக ஆசனங்களைப் பெறுவதாலோ தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை. ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெறுமானால் அது நாட்டில் அரசியல் குழப்ப நிலைக்கு வழிவகுக்குமேயன்றி நாட்டுக்கோ அல்லது மக்களுக்கோ எந்தவிதமான நன்மையையும் தரப்போவதில்லை. தமிழ்த் தேசியத்தைவிட சிறீலங்கா தேசியத்துக்கு முன்னுரிமை கொடுத்து வரும் சுமந்திரன் தமிழ் மக்களுக்கோ அல்லது நாட்டுக்கோ நன்மைதராத இவ்வாறான முன்னெடுப்பில் ஈடுபடுவதன் நோக்கம் என்ன? இதன்பின்னால் அனுரவின் ஆட்சியை விரும்பாத உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் தூண்டுதல் ஏதும் உள்ளனவா?

நாடாளுமன்றில் அதிக ஆசனங்களைப் பெறுவதற்கும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குமான உத்தியாக அரசியல் கட்சிகள் தேர்தல் கூட்டுக்களை ஏற்படுத்திக்கொள்வது அரசியல் முறைமை என்றாலும் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பொறுத்து அதற்கும் மேலான ஒரு பொறுப்பு ஒன்றுள்ளது. நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெறுவதற்கும் அதன்மூலம் தமிழ் மக்களின் பேரம்பேசும் வல்லமையை அதிகரிப்பதற்கும் அதன்மூலம் தமிழ்மக்களின் இருப்பைத் தக்கவைப்பதற்கும் இன்றைய களநிலைமைகளில் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறாத வகையில் அவர்களை ஒரேகுடையின் கீழ் அணிதிரட்டுவதே அப்பொறுப்பாகும். அதைவிடுத்து தலைவர்கள் தங்கள் தங்கள் இருப்புக்கும் பதவிக்குமாக அரசியல் கூட்டுக்களை அமைக்க முயல்வது மேலும் பாதகமான விளைவுகளையே தமிழ் மக்களுக்கு விளைவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி

குரு அரவிந்தன்



கனடா, தொல்காப்பிய மன்றமும் தமிழ்நாடு, இலக்குவனார் இலக்கிய இணையமும் இணைந்து நடத்திய 'முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு' கனடாவில் உள்ள ரொறன்ரோவில் 2024 செப்ரெம்பர் மாதம் 20, 21, 22 ஆகிய தினங்களில் முனைவர் திருமதி செல்வநாயகி சிறிதாஸ் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இறுதிநாள் நிகழ்வு கனடா தமிழ் இசைக் கலாமன்ற அரங்கில் நடைபெற்ற போது, பிரதம விருந்தினராக மாண்புமிகு திரு. சித்தார்த் நாத் கனடா இந்தியத்தூதரகத் தலைமைத்தூதர் கலந்து உரையாற்றிச் சிறப்பித்தார்.

இந்த நிகழ்வின் போது கண்காட்சி, ஆய்வரங்கம், சிறுவர் பேச்சு போட்டி, சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்குமான விநாடி வினா, தமிழ்த்திறன் போட்டிப் பரிசளிப்புகள், சதிராட்டம், நடனம், நடன ஆசிரியை திருமதி அற்புதராணி கிருபாராஜ் அவர்களின் மாணவிகளின் குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகம், கவி ஆசான் சண்முகராாசன் சின்னத்தம்பி அவர்களின் தலைமையில் அன்பின் ஐந்திணை கவியரங்கம், திருமதி மாலினி பரராஜசிங்கம் அவர்களின் நெறியாள்கையில் பறையிசை, திரு கஜேந்திரன் சண்முகநாதனின் ஒருங்கிணைப்பில் கலாலயக் கலைஞர்கள் வழங்கிய காத்தவராயன் சிந்துநடைக் கூத்து, திரு இராச்குமார் குணரட்ணத்தின் நெறியாள்கையில் தொல்காப்பியம் வில்லுப் பாட்டு, சிறுவர் நாடகம் போன்ற பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இதைவிட முனைவர் மு. இளங்கோவன் அவர்களின் ஒருங்கிணைப்பில் 'ஓலைச்சுவடி முதல் இணையத்திரை வரை' என்ற கண்காட்சியும் இடம் பெற்றிருந்தது.

இளைய தலைமுறையினரை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கான பல போட்டிகளும், நிகழ்ச்சிகளும் தமிழில் இடம் பெற்றுப் பரிசுகள் வழங்கப்பட்டன. கடந்த 35 வருடங்களாக ஆசிரியர்களாகிய நாங்களும், பெற்றோரும் கனடிய மண்ணில் தமிழ் மொழியை நிலைநிறுத்த எடுத்துக் கொண்ட முயற்சியின் பலனை எமது இளைய தலைமுறையினர் மேடையில் தமிழ் மொழியில் முழங்கிய போது, அதைப் பார்த்துப் பரவசமடைய முடிந்தது.

இதைவிட திருமதி வனிதா குகேந்திரன் அவர்களின் கலைக்கோயில் நுண்கலைக் கல்லூரி மாணவியரின் நடனம், திருமதி கௌசல்யா ராஜகுமார் அவர்களின் சிவசக்தி நாட்டியாலயா குழுவினரின் நடனம், திருமதி தயாளினி ஜீனராஜ் அவர்களின் சலங்கை நர்த்தனாலயா கலைக்கூடக் குழுவினரின் நடனம், திருமதி நிரஞ்சனா சந்துரு அவர்களின் நடனக்குழுவினரின் நடனம், திருமதி செந்தில்செல்வி அவர்களின் நாட்டியக் குழுவினரின் நடனம் ஆகியனவும் இந்த நிகழ்வின்போது இடம் பெற்றன.

முக்கிய நிகழ்வாக உலகெங்கும் இருந்து கிடைக்கப் பெற்ற தொல்காப்பிய ஆய்வுக்கட்டுரைகளில் மலருக்குத் தெரிவான ஆய்வுக்கட்டுரைகள் நேரடியாகவும், மெய்நிகர் வழியாகவும் வாசிக்கப்பட்டன. செயற்குழு உறுப்பினர், தன்னார்வத் தொண்டர் மற்றும் முனைவர் இல. சுந்தரம் அவர்களதும் திட்டமிட்ட கடின உழைப்பையும் மூன்றுநாள் நிகழ்வின் போதும் காணமுடிந்தது. மூன்று நாட்களும் விருந்துபசாரமும் சிறப்பாக இடம் பெற்றிருந்தது. ஆய்வரங்கத்தில் ஆய்வுக்கட்டுரை வாசித்தவர்களுக்கும், போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கும் தொல்காப்பியரின் சிறிய உருவச்சிலை விருதும், சான்றிதழும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வை மிகச் சிறப்பாக நடத்தி முடித்த மன்றத்தலைவி, முனைவர் திருமதி செல்வநாயகி சிறிதாஸ் அவர்களுக்கும், செயற்குழுவினருக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும் கனடா தமிழ் ஆர்வலர்கள் சார்பில் எமது பாராட்டுக்கள் உரித்தாகுக!

---



## வியுக்தியார் பதில்கள்

உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**சபா. கதிர்,**
**குருமணிகாடு, வவுனியா.**

**கேள்வி:** ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் பாராளுமன்றம் முன்கூட்டி கலைக்கப்பட்டதன் காரணமாக 85 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஓய்வூதியத்தினை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதே. அடுத்த தேர்தலிலும் அவர்களில் பெரும்பான்மையானவர்கள் வெற்றிபெறப்போவதில்லை. அவர்களை நினைக்க உங்களுக்கு பாவமாக இல்லையா?

**வியுக்தியார்:** பாராளுமன்றம் முன்கூட்டியே கலைக்கப்பட்டதால் அவர்கள் ஓய்வூதியத்தை இழந்தது கூட பெரிய இழப்பு அல்ல. கடைசி நேரத்தில் முன்னாள் ஜனாதிபதி தாராளமாக வாரி வழங்கிய மதுபான சாலைகளின் அனுமதி பத்திரத்தையும் புதிய ஜனாதிபதி ரத்து செய்திருப்பதுதான் அவர்களுக்கு மிகப்பெரிய இழப்பாக இருக்கும் என்றுதான் நினைக்கின்றேன்.

---

**எஸ் பீற்றர்போல்,**
**இரண்டாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** ஐக்கிய தேசிய கட்சியுடன் ஐக்கிய மக்கள் சக்தியை இணையுமாறு பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன என்றும், கிராமிய மட்டத்திலிருந்தும் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைவது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர், இவர்கள் இரண்டு தரப்பினரையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் அயல்நாடு ஒன்று கூட தீவிரமாக முயற்சி செய்வதாக கூறப்பட்டது. அப்போது அவர்களின் இரண்டு தலைவர்களும் தாங்கள் தான் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கையில் அதனை கண்டுகொள்ளவில்லை. யாராவது ஒருவர் விட்டுக்கொடுத்து அப்போதே இணைந்திருந்தால், அவர்களில் ஒருவர் இப்போது வெற்றிபெற்றிருப்பார். ஆனால் அவர்களின் சுய கௌரவம் அதற்கு இடம்கொடுக்கவில்லை. இப்போது இரண்டு தரப்பினரும் ஒன்றிணையவேண்டும் என்றாவது சிந்திப்பது நல்லதுதான். நாட்டில் புதிய அரசு அமைந்திருந்தாலும், உண்மையான மாற்றம் வர வேண்டும் என்றால் பலமான எதிர்க்கட்சி ஒன்றும் இருப்பது அவசியமானதுதானே.

---

**சி. ராஜேஸ்வரன்,**
**கோயில் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் கடந்த காலம் போன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக இணைந்து போட்டியிடுவதற்கு தமிழ் அரசுக் கட்சியினர் விருப்பம் தெரிவித்துள்ளனராமே. இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், ஈ. சரவணபவன், சிவமோகன், சீ.யோகேஸ்வரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் இல்லத்தில் கூடிப் பேசிய போது இந்தவிடயம் தீர்மானமாக எட்டப்பட்டதாக செய்தி பார்த்தேன். அவர்களின் இந்த முயற்சி வெற்றி பெறுமா?

**வியுக்தியார்:** அவர்கள் முதலில் தமது கட்சிக்குள்ளேயே இந்த யோசனைக்கு ஆதரவை பெற வேண்டுமே. ஏற்கனவே கட்சி இரண்டுபட்டுப்போய் நிற்கின்றது. இந்த லட்சணத்தில் இவர்கள் சிலர் கூடி முடிவெடுத்தால் அதனை கட்சியே ஏற்றுக்கொள்ளுமா என்பது சந்தேகம்தான். அவர்கள் இவ்வாறு பழைய பங்காளிகளுக்கு அழைப்பு விடுத்த பின்னர், பழைய பங்காளிகளோ தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பாக சங்கு சின்னத்தில் களம் இறங்குவது என்று முடிவெடுத்து விட்டார்களே. இனி இவர்கள் வேண்டுமானால் தமிழ் தேசிய பொதுக்கட்மைப்பில் இணைந்து போட்டியிடுவது பற்றி யோசிக்கலாம். எனக்கு என்னவோ, தமிழ் அரசு கட்சியே ஓரணியாக போட்டியிடுமோ என்பதே சந்தேகம்தான்.

---

**கே. கணேஷ்,**
**பிரதான வீதி, ஹட்டன்.**

**கேள்வி:** எதிர்வரும் பொதுத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் பங்காளிக் கட்சிகளாக இருக்கும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையில் அண்மையில் முக்கிய பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது என்றும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு இடையில் பேச்சு இடம்பெற்றது என்றும் ஒரு செய்தி பார்த்தேன். இந்தச் சந்திப்பில், நாட்டில் இடம் பெறவுள்ள பொதுத் தேர்தலில் பலமானதொரு கூட்டணியாகப் போட்டியிட இந்த தமிழ்க் கட்சித் தலைமைகள் தீர்மானித்துள்ளனவாமே.

**வியுக்தியார்:** நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரசும், மனோ கணேசனின் தமிழ் முற்போக்கு கூட்டணியும் பங்காளிக்கட்சிகளாக இணைந்திருந்தது தெரியும். அவர்கள் அதற்காக கட்சியுடன் ஒப்பந்தமும் செய்திருந்தார்கள். ஆனால் தமிழ் அரசு கட்சியோ எந்த வித நிபந்தனையும் இல்லாமலே அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தது. அதற்கு காரணம் என்ன என்பது ஒன்றும் இரகசியமானது இல்லையே. தமிழ் மக்கள் சஜித்துக்கே ஆதரவு வழங்குவார்கள் என்பதால்தான் அவர்களும் ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தார்கள். இப்போதும், தமிழ் மக்கள் புதிய அரசியல் கலாச்சாரத்தையே விரும்புகின்றார்கள் என்பதை தமிழ் அரசு புரிந்து கொண்டுவிட்டதுபோலத்தான் தெரிகின்றது. அதனால் தான் மனோ, ஹக்கீமுடன் கூட்டணி அமைப்பது பற்றி பேசுகின்றது என்று நினைக்கின்றேன்.

---

**போல் சத்திதாசன்,**
**அச்சுவேலி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** ஜனாதிபதி தேர்தலின்போது தான் யாருக்காகவும் யார் சார்பாகவும் எந்த விடயங்களையும் கூறவில்லை என்றும், யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது மக்களின் விருப்பம் என்பதே தனது கருத்தாக இருந்தது என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** ரெலோ எம்.பி. வினோ நோதாரலிங்கம் போல பகிரங்கமாக அவர் எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவர் யாருக்காவது வாக்களிக்கவேண்டும் என்று கோரவில்லை என்பதும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய விடயம் தானே. கட்சி மத்தியகுழு, சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளிப்பது என்று முடிவெடுத்த பின்னர், அதற்கு ஆதரவாக அவர் செயற்படவில்லை என்றாலே அது அவரது விருப்பம் அல்ல என்பதுதானே அர்த்தம். தான் எடுக்கின்ற முடிவைக் கூட துணிச்சலுடன் எடுக்க முடியாத இவர்கள் எல்லாம் அரசியலுக்கே பொருத்தமானவர்கள் இல்லையே.

---

**எஸ். விஸ்வா, புதூர், மட்டக்களப்பு.**


**கேள்வி:** தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் அளித்த வாக்குகள் தமிழ்த் தேசியத்துக்கானவையே. அத்துடன், 30 சதவீதமான தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணித்துள்ளனர் என்று கூறியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இவர் என்ன சொல்ல வருகிறார் என்பது உங்களுக்காவது புரிகின்றதா?

**வியுக்தியார்:** தேர்தலுக்கு முன்னர் தமிழ் பொதுவேட்பாளருக்கு அளிக்கும் வாக்குகள் ஒற்றையாட்சிக்கு ஆதரவான வாக்குகள் என்றவர் இப்போது அவையும் தமிழ் தேசியத்துக்கானவை என்கிறார். இப்போது அவரது தமிழ் தேசியமும் ஒற்றையாட்சிக்குள் சுருங்கிவிட்டதோ தெரியவில்லையே. கடந்த ஜனாதிபதி தேர்தலை இதற்கு முன்னர் 2019ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடுகையில் வாக்களிப்பு வீதம் குறைவானதுதான். நாடு முழுவதும் மக்கள் இன- மத பேதமின்றி தேர்தலை பகிஸ்கரித்திருப்பது நமது முன்னணியினரின் தேர்தல் பகிஷ்கரிப்பு கோரிக்கையின் காரணமாகத்தான் என்று சொல்கிறார் என்று நினைக்கின்றேன். இவர்களின் ஒரு நாடு இரு தேசம் கொள்கையை சிங்கள மக்களும் 30 வீதமானவர்கள் ஏற்றுக்கொண்டுவிட்ட பின்னர், இனி என்ன விரைவில் நமது தேசம் மலர்ந்து விடும் என்று நம்புவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று போர்களை கண்ட ஜம்மு காஷ்மீர்: பத்தாண்டுகளின் பின்னர் சட்டமன்ற தேர்தல்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



காஷ்மீர் 1947, 1965 மற்றும் 1999 ஆகிய ஆண்டுகளில் இரண்டு நாடுகளுக்கு இடையே மூன்று முறை போர்கள் நிகழ்ந்துள்ளன. இந்த போர்கள் தவிர்த்து அவ்வப்போது ராணுவ மோதல்களும் நிகழ்ந்துள்ளன. இரு நாடுகளின் சார்பாகவும் பல ஆண்டுகளாக எல்லைப்புறத்தில் ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு அமைதியற்ற சூழல் தொடர்ந்து நிலவி வருகிறது

காஷ்மீர் பிரச்சனை இந்தியாவிற்கும், பாகிஸ்தானிற்கும் இடையே நிலவி வரும் நீண்ட கால நெருக்கடிக்கு நில உரிமை தொடர்பான பிரச்சனையே முக்கியமானதாகும். ஆங்கில அரசிடமிருந்து சுதந்திரம் அடைந்த நாள் முதல் இன்று வரை இது தீர்க்கப்படாத பிரச்னைகளில் ஒன்றாக பார்க்கப்படுகிறது.

நிலப்பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதும், அதனைத் தொடர்ந்து போர் அல்லது ராணுவ நடவடிக்கை நடைபெறுவதும் அவ்வப்போது இரு அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்துவதும், பன்னாட்டு அமைப்புகள் தலையிட்டு இந்த பிறச்சனையை தீர்த்து வைக்க முயற்சிகள் செய்வது என்று இருந்தாலும் காஷ்மீர் சர்ச்சை இன்று வரை தொடர்கிறது என்பதே உண்மை.

### மறுசீரமைக்கப்பட்ட ஜம்மு காஷ்மீர்

பத்து ஆண்டுகளுக்கு பின் மூன்று கட்டங்களாக சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுகிறது. மறுசீரமைக்கப்பட்ட ஜம்மு காஷ்மீர் ஒன்றியத்தின் மொத்தமுள்ள 114 சட்டமன்றத் தொகுதிகளில் 90 சட்டமன்றத் தொகுதிகளுக்கு மட்டும் தேர்தல் நடைபெறுகிறது. பாக்கிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள 24 சட்டமன்றத் தொகுதிகளுக்கு தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டு, ஜம்மு காஷ்மீரில் 90 சட்டமன்றத் தொகுதிகளுக்கு மட்டுமே தற்போதய தேர்தல் நடைபெறுகிறது.

2019ம் ஆண்டில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 370 மற்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 35கீழ் வழங்கப்பட்டிருந்த சிறப்புச் சலுகைகள் இந்திய நாடாளுமன்றத்தால் நீக்கப்பட்டது.

அத்துடன் 2019 ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டத்தின்படி 31 ஒக்ரோபர் 2019 முதல் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை ஜம்மு காஷ்மீர் (ஒன்றியப் பகுதி) மற்றும் லடாக் ஒன்றியப் பகுதி என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

பின்னர் 2020ம் ஆண்டில் ஜம்மு காஷ்மீர் தொகுதிகள் மறுவரையறை அறிக்கையின்படி, ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பகுதியில் 114 சட்டமன்றத் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டது. அதில் 24 சட்டமன்றத் தொகுதிகள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள ஆசாத் காஷ்மீர் மற்றும் கில்ஜித் - பல்டிஸ்தான் பகுதிகளில் உள்ளது.

### மூன்று போர்கள் நிகழ்ந்த காஷ்மீர்

ஜம்மு காஷ்மீர் பிராந்தியத்தின் மேற்கு பகுதிகளையும், வடக்குப் பகுதிகளையும் ஜூலை 1947-இல் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்தது. இப்பகுதிகளை ஆசாத் காஷ்மீர் மற்றும் வடக்கு நிலங்கள் என்ற பெயரில் பாகிஸ்தான் தனது கட்டுப்பாட்டுக்குள் இப்போதும் வைத்துள்ளது.


மற்றொரு அயல் நாடான சீனா ஜம்மு காஷ்மீரின் கிழக்குப் பகுதியில் உள்ள அக்சய் சின் பகுதியை ஆக்கிரமிப்பு செய்து தனது கட்டுப்பாட்டில் இப்போதும் வைத்துள்ளது. 1947இன் பின்னர் ஜம்மு காஷ்மீர் இராச்சியத்தின் மன்னர் ஹரி சிங், ஜம்மு காஷ்மீரை இந்தியாவுடன் இணைய ஜம்மு காஷ்மீர் இணைப்பு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

காஷ்மீர் 1947, 1965 மற்றும் 1999 ஆகிய ஆண்டுகளில் இரண்டு நாடுகளுக்கு இடையே மூன்று முறை போர்கள் நிகழ்ந்துள்ளன. இந்த போர்கள் தவிர்த்து அவ்வப்போது ராணுவ மோதல்களும் நிகழ்ந்துள்ளன. இரு நாடுகளின் சார்பாகவும் பல ஆண்டுகளாக எல்லைப்புறத்தில் ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு அமைதியற்ற சூழல் தொடர்ந்து நிலவி வருகிறது.

### சிறப்பு அந்தஸ்து ரத்து

ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து கடந்த 2019 ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டது. அதன் பிறகு அந்த மாநிலம் காஷ்மீர், லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டது. அதன்பிறகு பத்து ஆண்டு கள் இடைவெளிக்கு பிறகு காஷ்மீர் சட்ட மன்றத்திற்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. 90 உறுப்பினர்களை கொண்ட சட்ட சபைக்கு 3 கட்டங்களாக தேர்தல் நடக்கிறது.

காஷ்மீர் மாநில முதல்கட்ட தேர்தல் கடந்த 18 ஆம் தேதி நடந்தது. இதில் 61 சதவீத வாக்குகள் பதிவாகின.
இந்நிலையில், 25.09.24இல் 2 வது கட்ட தேர்தல் நடந்தது. 6 மாவட்டங்களில் உள்ள 26 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. பலத்த பாதுகாப்புடன் தேர்தல் நடைபெற்றது. வாக்குப்பதிவு



முடிந்த நிலையில், 57.03 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

நீண்ட சர்ச்சைகளின் பின்னர், நவம்பர் 2018ம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத்தால் ஜம்மு காஷ்மீர் சட்டமன்றம் கலைக்கப்பட்டு, 20 டிசம்பர் 2018 அன்று குடியரசுத் தலைவர் ஆட்சி நிறுவப்பட்டது.

மாநிலத் தகுதி இழந்த பின்னர் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பகுதிக்கு 2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள முதல் சட்டமன்றத் தேர்தல் ஆகும்.

### 2014 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல்

ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லா, பாஜகவின் மாநில தலைவர் ரவீந்தர் ரெய்னா, ஜம்மு காஷ்மீர் காங்கிரஸ் தலைவர் தாரிக் ஹமீது கர்ரா உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்கள் உட்பட 239 வேட்பாளர்கள் இந்த தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

நவம்பர் 2014ல் நடைபெற்ற ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத் தேர்தல் முடிவில் முப்தி முகமது சயீத் தலைமையில் சம்மு காசுமீர் மக்களின் சனநாயக கட்சி மற்றும் பாரதிய ஜனதா கட்சிகள் இணைந்து அரசு அமைத்தது. அப்போது முப்தி முகமது சயீத் முதலமைச்சரானர்.

7 ஜனவரி 2016 முப்தி முகமது சயீத் காலமானார். பின் மெகபூபா முப்தி முதலமைச்சராக தேர்வு செய்யப்பட்டார். ஜூன் 2018ல் முதலமைச்சர் மெகபூபா முப்தி அரசுக்கு வழங்கியிருந்த ஆதரவை பாரதிய ஜனதா கட்சி விலக்கிக் கொண்டது.


அதனால் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஆளுநர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. நவம்பர் 2018ல் ஜம்மு காஷ்மீர் சட்டமன்றம் கலைக்கப்பட்டது அறிந்ததே.

### மீள பாரதிய ஜனதா ஆட்சி?

ஜம்மு காஷ்மீரின் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடும் முக்கிய வேட்பாளர்களில் தாரிக் ஹமீது கர்ரா ஒருவராவார். சிறிநகரைச் சேர்ந்த மத்திய ஷால்டேங் தொகுதியில் ஜம்மு காஷ்மீர் காங்கிரஸ் தலைவர் தாரிக் ஹமீது கர்ரா போட்டியிடுகிறார். மெஹபூபா முஃப்தியின் தலைமையிலான மக்கள் ஜனநாயக கட்சியில் பொறுப்பு வகித்தார். பின்னர் பாஜகவுடன் மக்கள் ஜனநாயக கட்சி கூட்டணி அமைத்ததால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு தனது எம்பி பதவியை ராஜினாமா செய்துவிட்டு கட்சியிலிருந்து விலகி காங்கிரஸில் கடந்த 2017-ல் இணைந்தார்.

தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் உமர் அப்துல்லா 2024 சட்டப்பேரவை தேர்தலில் மத்திய காஷ்மீரில் உள்ள இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகிறார். மூன்று தலைமுறைகளாக அப்துல்லாவின் குடும்பத்தார் வாகை சூடிய கந்தர்பால் தொகுதி அதில் ஒன்றாகும்.

ஜம்மு காஷ்மீர் பாஜக மாநில தலைவர் ரவீந்தர் ரெய்னா கடந்த 2014-ல் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் ரஜோரி மாவட்டத்தில் உள்ள நவ்ஷேரா தொகுதியில் போட்டியிட்டு வென்றார். மீண்டும் அதே தொகுதியில் இம்முறை களம் காண்கிறார். இருப்பினும் அவரை எதிர்த்துப் போட்டியிடும் தேசிய மாநாட்டு கட்சியின் சுரிந்தர் சவுத்ரிக்கும் இவருக்கும் இடையில் கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொழிலாளர்களுக்கு எந்தவித பிரச்னையும் இல்லை

பெய்ரூட், செப். 29

லெபனானில் வசிக்கும் இலங்கையர்கள் பாதுகாப்பாக இருப்பதாக அந்த நாட்டுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.


அங்கு வசிக்கும் இலங்கையர்களுடன் தூதரகம் நெருங்கிய தொடர்பிலுள்ளதாகவும் தூதுவர் கபில ஜயவீர தெரிவித்தார்.

சுமார் 7,600 இலங்கையர்கள் லெபனானில் பணிபுரிந்து வருவதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் நாட்டின் தெற்குப் பகுதிகளில் வசிப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஹிஸ்புல்லா அமைப்பை இலக்கு வைத்து, லெபனானின் வட பகுதிகளில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தியிருந்தது.

மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் இலங்கையர்கள் வசிக்கவில்லை எனவும் தூதுவர் சுட்டிக்காட்டினார். (எ)

# மரக்கறி விலையில் மாற்றம்



கொழும்பு, செப். 29

சந்தையில் மரக்கறிகளின் விலைகள் சற்று வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளன. இதன்படி கரட், போஞ்சி, கோவா, வெண்டிக்காய் மற்றும் பூசணிக்காய் உள்ளிட்ட மரக்கறிகளின் விலைகள் குறைந்துள்ளன.

இதற்கமைய கொழும்பு மெனிங் சந்தையில் ஒரு கிலோ கிராம் போஞ்சி 200 ரூபாயாகவும், ஒரு கிலோ கிராம் கரட் 150 ரூபாயாகவும் பதிவாகியுள்ளன.

அத்துடன் ஒரு கிலோ கிராம் கோவா 220 ரூபாய்க்கும், ஒரு கிலோ கிராம் கத்தரிக்காய் 200 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும், ஒரு கிலோ கிராம் கத்தரிக்காய் 200 ரூபாயாகவும், ஒரு கிலோ கிராம் பூசணிக்காய் 60 ரூபாயாகவும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும்

## மாக்சிச லெனினிச கட்சி வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், செப். 29

புதிய ஜனாதிபதியாக அநுரகுமார வந்ததைத் தொடர்ந்து நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பெரும் அதிர்வு ஏற்பட்டுள்ளது. எனவே, தேர்தலின் போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அவர் நிறைவேற்ற வேண்டும்- இவ்வாறு மாக்சிச லெனினிச கட்சியின் பொதுச் செயலாளர் சி. க. செந்திவேல் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் ஓர் இடதுசாரி என்ற வகையில் புதிய ஜனாதிபதியை வரவேற்கிறோம். எம்மைப் பொறுத்தவரை இலங்கையில் உழைக்கின்ற மக்கள் 90 வீதமானவர்கள் இருக்கின்றனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்து இருக்கிறது. தற்போதைய ஜனாதிபதி, மாக்சிச நிலைப்பாட்டில் பெரும் போராட்டங்களை முன்னெடுத்து வந்தவர். தற்போது அரசியல் ரீதியாக அவர் வெற்றி பெற்றிருக்கிறார்.

நமது நாட்டிலேயே 76 ஆண்டுகளாக பாரம்பரிய கட்சிகள் என்று சொல்லக்கூடிய ஐக்கிய தேசிய கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ளவர்கள் தான் ஜனாதிபதியாக வந்திருந்தார்கள். ஆனால், புதிதாக ஒருவர் ஜனாதிபதியாக வந்திருக்கிறார்.

எனவே, அவர் முன்வைத்த தேர்தல் வாக்குறுதிகள் எவ்வாறு முன் வைத்தாரோ அதேபோன்று செயல்பட வேண்டும். பலர் தேர்தலுக்கு வர முன்னர் பல்வேறு விஞ்ஞாபனங்களை முன் வைப்பார்கள்.

ஆனால், அதிகாரத்துக்கு வந்த பின்னர் அவர்கள் செயல்படுவது இல்லை. அநுர அவ்வாறு செய்ய மாட்டார். சொன்ன விடயங்களை செய்வார் என்று நாம் நம்புகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக நாட்டுக்கு மிகப்பெரும் கடன் சுமையை கொண்டு வந்தார். எனவே, இந்த நிலையில் ஏழைக் குடும்பத்திலிருந்து வந்த அநுர நாட்டை மாற்ற வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம்- என்றார். (எ)

# ஐந்து வயது சிறுமிமீது பாலியல் துஷ்பிரயோகம்

கொழும்பு, செப். 29

ஐந்து வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய நபர் ஒருவரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

லுணுகலை, ஜன உதான பகுதியைச் சேர்ந்த 34 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

5 வயதும் 6 மாதங்களேயான சிறுமியே இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சிறுமி தனது வீட்டுக்கு அயல் வீடான சந்தேக நபரின் வீட்டுக்கு விளையாடுவதற்காக செல்வதை வழக்கமாக கொண்டுள்ளாள்.

கடந்த 23 திகதி இந்த சிறுமியை தனது வீட்டில் அறை ஒன்றுக்கு கூட்டிச் சென்று கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

அத்துடன் 23 ஆம் திகதி தொடக்கம் 4 நாட்களாக தொடர்ந்தும் இவ்வாறான குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளதாக சிறுமி தாயாரிடம் கூறியுள்ளாள்.

இதனை தொடர்ந்து குறித்த சிறுமியின் தாயால் வெள்ளிக்கிழமை லுணுகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# சுத்தியலால் தாக்கி ஒருவர் படுகொலை

## சந்தேக நபர் பொலிஸாரால் கைது

குருநாகல், செப். 29

குருநாகல், வாரியப்பொல, வல் பாலுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சுத்தியலால் தாக்கப்பட்டு ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

36 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# மேன்மைதங்கிய ஜனாதிபதியாக....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதிக்க அரசியல், அதிகார துஷ்பிரயோகம், சட்டத்தின் ஆட்சியின் சீர்குலைவு மற்றும் முன்னென்றும் இல்லாத ஊழலை மறந்து விடுவார்கள் என்று அவர் நினைத்தாரோ?

தனது ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரு குறிப்பிடத்தக்க வாக்கு வங்கி இல்லாத நிலையில் ராஜபக்சாக்களின் கட்சியில் இருந்தும் வேறு கட்சிகளில் இருந்தும் வந்த அரசியல்வாதிகளை நம்பி கூட்டணி ஒன்றை அமைத்து சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற முடியும் என்று விக்கிரமசிங்க நினைத்தது பெரும் தவறு. முன்னரைப் போன்று சிறுபான்மைச் சமூகங்களும் அவரை இந்த தடவை ஆதரிக்க முன்வரவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவை பெரும்பாலான மக்கள் பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தின் ஒரு அங்கமாகவே நோக்கினார்கள். அவருக்கு இது ஜனாதிபதி தேர்தலில் இரண்டாவது தோல்வி. திசாநாயக்கவிடம் தோல்வி கண்டாலும் கூட விக்கிரமசிங்கவை தோற்கடித்து விட்டதில் பிரேமதாச ஒருவிதத்தில் திருப்தியடைந்திருக்கக்கூடும்.

ஜனாதிபதி திசாநாயக்கவும் கூட ஐம்பது சதவீதமான வாக்குகளை பெறமுடியவில்லை. இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் முதன் முதலாக மற்றைய வேட்பாளர்களின் இரண்டாவது விருப்பு வாக்குகளை எண்ண வேண்டிய நிர்ப்பந்தம் இந்த தடவையே ஏற்பட்டது. தனக்கு கிடைத்த ஆணையின் தன்மையை அவர் விளங்கிக் கொண்டு செயற்படவேண்டிய தேவை இருக்கிறது.

கொழும்பில் அதிகார ஏகபோகத்தைக் கொண்டிருந்த மூன்று பிரதான அரசியல் கட்சிகளையும் கிரகணம் செய்து திசாநாயக்கவும் தேசிய ஐக்கிய மக்கள் சக்தியும் தேர்தலில் கண்டிருக்கும் வெற்றி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை நாட்டை விட்டு வெளியேற வைத்த 2022 மக்கள் கிளர்ச்சியுடன் தொடக்கிய மாற்றத்தை நோக்கிய அரசியல் நிகழ்வுகளின் சுழற்சியை நிறைவு செய்திருந்து என்று எவரும் மெத்தனமாக நினைத்து விடக்கூடாது. ஜனாதிபதி திசாநாயக்க சமாளிக்க முடியாத எண்ணற்ற சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டியவராக இருக்கிறார்.

பாராளுமன்றத்தை கலைத்து இரு மாதங்களுக்கும் குறைவான இடைவெளிக்குள் பொதுத்தேர்தலுக்கான திகதியை அவர் அறிவித்திருக்கிறார். ஜனாதிபதி தேர்தலில் கண்ட தோல்வியின் தாக்கத்தில் இருந்து மற்றைய கட்சிகள் விடுபடுவதற்கு முன்னதாக இந்த அறிவிப்பு வந்திருக்கிறது.

பொருளாதாரத்தை உறுதிப்பாட்டுக்கு கொண்டுவரவும் வாக்குறுதிகளை நிறைவேற்றவும் தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்ற தேர்தலில் பெரிய வெற்றியைத் தரவேண்டும் என்று திசாநாயக்க தன்னை ஜனாதிபதியாக தெரிவு செய்த மக்களிடம் கோருவார். ஜனாதிபதி தேர்தலில் மக்கள் வாக்களித்த முறையின் அடிப்படையில் தான் பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் அமையுமா அல்லது அவருக்கு முழுமையான ஆதரவைக் கொடுப்பதற்கு தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் அதிகப்பெரும்பான்மை ஆசனங்களுடன் தெரிவு செய்வார்களா என்பது முக்கியமான கேள்வி.

இது இவ்வாறிருக்க, ஜனாதிபதி தேர்தலில் மக்கள் வாக்களித்த முறையின் புவியியல் ஒழுங்கை கருத்தில் எடுக்க வேண்டியதும் அவசியமாகிறது.

தென்னிலங்கையில் இருந்து குறிப்பாக சிங்கள பௌத்த சமூகத்தவர்கள் அதிகப்பெரும்பான்மையாக வாழும் பிராந்தியங்களில் இருந்து பெரும்பான்மை ஆதரவைப் பெற்று திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அதற்கு மாறாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலையகத்திலும் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த பிரேமதாசவுக்கும் விக்கிரமசிங்கவுக்குமே பெருமளவில் வாக்களித்திருக்கிறார்கள்.

சிறுபான்மைச் சமூகங்கள் திசநாயக்கவுக்கு முற்றாக வாக்களிக்கவில்லை என்று கூறமுடியாது. ஆனால், பெரும்பான்மை இனத்தவர்களின் வாக்குகள் தான் அவரை வெற்றிபெற வைத்தன. அதற்காக கோட்டாபய ராஜபக்ச போன்று சிங்கள மக்களே தன்னை ஜனாதிபதியாக தெரிவு செய்தார்கள் என்று திசாநாயக்க ஒருபோதும் சொல்லப் போவதில்லை.

கோட்டாபய சிங்கள மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட தற்கான காரணத்துக்கும் திசாநாயக்க தெரிவு செய்யப்பட்ட காரணத்துக்கும் இடையே வேறுபாடு இருக்கிறது.

அதேவேளை, தாங்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரு அரசியல் தலைவராக திசாநாயக்கவை சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளில் கணிசமான பிரிவினர் அடையாளம் கண்டு ஆதரவு வழங்கியிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான அந்த தேசியவாத சக்திகளின் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணியாமல் துணிச்சலாக திசாநாயக்க நடந்து கொள்வாரா இல்லையா என்ற கேள்விக்கு காலம்தான் பதில் சொல்லவேண்டும். தங்களது பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியிடமிருந்து புதிய அணுகுமுறையை சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்பார்க்கின்றன.

சிறுபான்மைச் சமூகங்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் மாற்றத்தை விரும்பவில்லை என்று தேர்தல் முடிவுகளை வியாக்கியானம் செய்யமுடியாது. சிங்கள மக்கள் விரும்புகின்ற மாற்றத்திற்குள் தங்களது அபிலாசைகளுக்கு எந்தளவுக்கு மதிப்பளிக்கப்படும் என்பதே தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கேள்வி.

எது எவ்வாறிருந்தாலும், இதுகால வரை இலங்கை அரசியல் அதிகாரத்தை தங்களது ஏகபோகத்தில் வைத்திருந்த ஒரு வர்க்கத்துக்கு வெளியில் உள்ள ஒரு "தோழர்" ஜனநாயக வழிமுறையின் மூலமாக நாட்டின் தலைவராக தெரிவு செய்யப்பட்டதில் உள்ள வரலாற்று முக்கியத்துவத்துவம் உரியமுறையில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஜனாதிபதி திசாநாயக்க ஒரு கணிசமான காலப்பகுதிக்கு ஆட்சிசெய்த பின்னர் மாத்திரமே அவரைப் பற்றிய மதிப்பீட்டைச் செய்யமுடியும். •

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திருமலை...

ஓர் உறுப்பினர் மட்டுமே தெரிவு செய்யப்பட வாய்ப்புள்ளது. எனவே, இது தொடர்பில் அந்தந்த மாவட்டக் கிளைகளுடன் பேசி ஆராய்ந்து முடிவு ஒன்றை எடுப்பதற்கு தமிழ் அரசின் மத்திய குழு தீர்மானித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## த.தே.கூ...

மத்திய குழுக்கூட்டம் நேற்று சனிக்கிழமை வவுனியாவிலுள்ள விருந்தி னர் விடுதியில் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து நடந்த செய்தியாளர் சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தவை வருமாறு,

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி எடுத்த மூன்று தீர்மானங்களுக்கு மாறாக, செயல்பட்டவர்களிடம் விளக்கம் கோருவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், ப. அரியநேத்திரனை கட்சியில் இருந்து விலக்குமாறு பலமான கருத்துகள் சொல்லப்பட்டாலும் சில விடயங்கள் தொடர்பாக அவரிடம் விளக்கம் கேட்டு தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களுடைய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக நாங்கள் விசேடமான அறிவிப்பு ஒன்றை மனமுவந்து விடுக்கின்றோம். தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கின்ற - விசேடமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்து வெவ்வேறு காலகட்டங்களில் விலகிச்சென்ற கட்சிகளை மீண்டும் எங்களுடன் இணைந்து தேர்தலுக்கு முகங்கொடுக்கவேண்டும் என்று விநயமாக அறிவிப்பு விடுக்கின்றோம். சவால்மிக்க ஒரு சூழலில் இந்தத் தேர்தல் இருப்பதனால் இணங்கிவந்து இந்தத் தேர்தலுக்கு முகங்கொடுக்குமாறு இரு கரம் நீட்டி அழைக்கின்றோம்.

தமிழ் அரசுக் கட்சியின் பெயரிலும் அதன் சின்னத்திலும்தான் நாங்கள் கடந்த காலங்களில் தேர்தலில் போட்டியிட்டிருந்தோம். அவ்வாறே இந்தத் தேர்தலிலும் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருக்கிறோம். இந்த அழைப்பை ஏற்று வந்தால் மிகவிரைவாக நாங்கள் பேச்சு மூலம் வேட்பாளர்களை நிறுத்தும் விடயங்களை இணைந்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்போம். அடுத்துவரும் ஒரு சில நாட்களில் அவர்க ளின் பதிலை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு இணங்கி வராவிட்டால் தமிழ் அரசுக் கட்சி தனித்தும் போட்டியிடும்.

இம்முறை தேர்தலில் வட, கிழக்குக்கு வெளியே தலைநகர் உட்பட தமிழர்கள் வாழ்கின்ற ஏனைய சில மாவட்டங்களிலும் போட்டியிடுவது தொடர்பாகவும் பரிசீலனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ் பொதுக்கட்டமைப்பிடம் இருந்து இதுவரை எந்தவித அழைப்பும் வரவில்லை. நாங்கள் பிரதானமான தமிழ்க் கட்சி. இதுவரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக வேறு பல கட்சிகளுடன் இணைந்து செயல் பட்டபோதும் எமது சின்னத்திலும் பெயரிலுமே தேர்தலில் போட்டியிட்டோம். அந்தவகையில் பிரதான கட்சி என்ற வகையிலேயே இந்த அழைப்பை விடுக்கிறோம்.

வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக சரியான அணுகலை நாங்கள் மேற்கொள்வோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. மக்களிடத்தில் பெரும் எதிர்பார்ப்பு இருக்கின்றது. தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்குப் பிறகு பல்வேறு எண்ணப்பாடுகள் கூடியிருக்கின்றன. அது நல்ல விடயம். எனவே, இளைஞர்கள், ஆற்றலுள்ளவர்கள், படித்தவர்கள், பெண்கள் என்று அவர்களுக்கான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யும் வகையிலேயே வேட்பாளர் தெரிவு நடைபெறும். இதனை ஆராய்வதற்காக நியமனக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு இறுதி முடிவுகளை எடுக்கும் மாவட்ட ரீதியாக கலந்தாலோசித்து அந்த முடிவுகளை எடுப்போம் - என்றார். (ஐ)

## தரம் 5...

தொடர்பில் பரீட்சை திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த விசாரணைகளை கருத்தில் கொண்டு விசாரணைக் குழுவால் தீர்மானம் எடுக்கப்படும் - என்று கல்வி அமைச்சு மேலும் தெரிவித்தது. (ஐ)

## அரசு...

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தின் கணக்காய்வாளர் டபிள்யூ . பி. சி. விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பு காலிமுகத்திடல் மைதானத்தில் விட்டுச் செல்லப்பட்ட 110 அதிசொகுசு வாகனங்கள் தொடர்பில் ஆராய விசேட கணக்காய்வு குழு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மோட்டார் போக்குவரத்து ஆணைக் குழுவுடன் இணைந்து இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த அவர், குறித்த வாகனங்களை உண்மையிலேயே பயன்படுத்தியவர்கள் யார் என்பதை ஆராய, தகவல் திரட்டும் விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சுகாதார அமைச்சுக்கு சொந்தமான ஆயிரத்து 794 வாகனங்கள் காணாமல் போயுள்ளன. இதில், 649 கார்கள், ஆயிரத்து 115 மோட்டார் சைக்கிள்கள் அடங்கும். இதேபோன்று, கல்வி அமைச்சுக்கு சொந்தமான 212 வாகனங்களும் நீர்ப்பாசன திணைக்களத்துக்கு சொந்தமான 880 வாகனங்களும் தபால் திணைக்களத்துக்கு சொந்தமான 45 வாகனங்களும் மாயமாகியுள்ளன.

இந்த வாகனங்கள் தொடர்பில் தகவல் அறியப்படாததால் விசார ணைகள் பெரும் சவாலானவையாக உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கணவாய்...

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த மீனவர் மேலும் நால்வருடன் கணவாய் பிடிப்பதற்கு தடி நடுவதற்காக படகில் சென்றுள்ளார். அப்போது திடீரென மயக்கமடைந்தார். அவருடன் சென்றவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் அவரை சேர்ப்பித்தனர்.

அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்தனர். அவரின் மரணத்துக்கு மாரடைப்பே காரணம் என்று பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

## 5பேருக்கு...


7 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இது 2023இல் 8 கோடி ரூபாயாக உயர்ந்தது. இந்த ஆண்டில் 11 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஒரு கோடியே 56 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு தலா 2 கோடியே 91 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டன. ஹேமா பிரேமதாஸவுக்கு 68 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

இதேநேரம், இந்த ஆண்டில் ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்காக வரவு - செலவு திட்டத்தில் 660 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது, கடந்த ஆண்டில் 273 கோடி ரூபாயாக இருந்தது என்று மத்திய வங்கி அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு பேராதனை பல்கலைக்கழக பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள இந்தத் தகவலைத் தெரிவித்தார். (ஐ)

# மக்கள் செயல்திட்டங்களுக்கு பங்களிப்பு வழங்க நாம் தயார்

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு, செப். 29

எமது நாடு அனைத்துத் தரப்பிலிருந்தும் பல சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இதனால், பெரும்பான்மையான மக்கள் ஆதரவற்ற நிலையில் இருக்கின்றனர். அவர்களுக்காக முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி பங்களிப்பு வழங்கத் தயார் என்று அந்தக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு - கொலன்னாவையில் நேற்று மக்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை தீர்ப்பதற்கு பங்களிக்கத் தயாராக உள்ளேன். சமூகத்தில் இளைஞர்கள் பெருமையுடன் வாழ வாய்ப்பு வழங்கப்பட வேண்டும், இளைஞர்கள் அதிகாரம் பெற வேண்டும், இளைஞர்களுக்கு தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். தேர்தலில் பின்னடைவை சந்தித்தாலும் இவற்றைப் புறக்கணிக்க முடியாது.

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் வேலைத் திட்டம் இந்தப் பிரச்னைகளுக்கு எல்லா நேரங்களிலும் வலுவாக பங்களிக்க வேண்டும் என்பதே - என்றார். (ஐ)

## தபால்மூல...

விண்ணப்பங்கள் எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 08 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். 1981ஆம் ஆண்டு 01ஆம் இலக்க பாரா ளுமன்றத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து 7 முதல் 14 நாட்களுக்குள் தபால் மூல வாக்குகளுக்கான விண் ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கு நட வடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இதன்படி, அனைத்துத் தபால் மூல வாக்காளர்களும் இந்த பாராளுமன்றத் தேர்தலுக்கான உங்களின் தபால் மூல வாக்கு விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரால் சான்றளித்து உங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்து மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்தத் தேர்தல் 2024 வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டது. இதன்படி கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் பயன்படுத்தப் படவுள்ளது" - என்றார். (ஐ)

## ரணிலுக்கு...

செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களை ஒன்றிணைத்து பொதுத்தேர்தலில் போட்டியிட பேச்சு நடத்தியுள்ளோம். போட்டியிடும் அரசியல் கட்சி அல்லது கூட்டணி, சின்னம் குறித்து விரிவான பேச்சில் ஈடுபட்டுள்ளோம். பேச்சின்போது வெற்றிக்கிண்ணம், வெற்றிலை, நாற்காலி, சிலிண்டர் ஆகிய சின்னங்களில் போட்டியிட வேண்டும் என்று மாறுபட்ட யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இறுதியில் பொதுச் சின்னத்தில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதமர் வேட்பாளராக போட்டியிடப் போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாவுக்கு பிரதமர் பதவியை வழங்கத் தயாராகவுள்ளோம். சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் பேச்சில் ஈடுபடப்போவதில்லை. பொதுஜன பெரமுன இம்முறையும் படுதோல்வியடையும் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும் - என்றார். (ஐ)

# யுக்திய நடவடிக்கை நிறுத்தப்படுகின்றது



கொழும்பு, செப். 29

"யுக்திய" நடவடிக்கைக ளுக்காக விசேட கடமையாற்றிய பொலிஸார் அனைவரையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கடமைகளில் இருந்து விடுவிக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய உத்தரவிட் டுள்ளார்.

அனைத்து பிரதி பொலிஸ் மா அதிபர்கள் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் அனுப்பிய கடிதத்தில், யுக்திய நடவடிக்கைக்கு சிறப்பு அதிகாரிகளை ஈடுபடுத்தியமையால் பொலிஸ் நிலையங்கள் மற்றும் பிரிவுகளின் கடமைகள் தடைப்பட்டுள்ளன என்று தெரியவந்துள்ளதாகவும் பதில் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

## இஸ்ரேலின்...

பூர்வமாக அறிவித்தது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் அமைப்பு 1200 பேரை கொன்றது. அத்துடன், 253 பேரை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றது. இதைத் தொடர்ந்து காஸா மீது இஸ்ரேல் படையெடுத்தது. இதற்கு பதிலடியாக லெபனானின் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு இஸ்ரேல்மீது ஏவுகணைகளை வீசித் தாக்கியது. இதைத் தொடர்ந்து இந்த மாதத் தொடக்கத்தில் ஹிஸ்புல்லாஹ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல்களை அதிகரித்தது. இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் நஸ்ரல்லாஹ் கொல்லப்பட்டார்.

இஸ்லாமின் ஷியா பிரிவு மதகுருவான நஸ்ரல்லாஹ் ஹிஸ்புல்லாஹ் போராட்ட அமைப்பை இரு தசாப்த காலத்துக்கு மேலாக வழிநடத்தியவர். 1982ஆண்டு ஹிஸ்புல்லாஹ் அமைப்பில் இணைந்த அவர், நீண்டதூரம் தாக்கும் ஏவுகணைகள் மூலமாக இஸ்ரேலை தாக்கி அதனை நிலைகுலையச் செய்திருந்தார். இது அந்த அமைப்புக்குள் அவருக்கு செல்வாக்கை அதிகரித்தது. 1992ஆம் ஆண்டு ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர் அப்பாஸ் அல் - முஸாவி கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அந்த அமைப்பின் தலைவராக ஹசன் நஸ்ரல்லாஹ் தெரிவானார்.

இவரின் தலைமையின் கீழ் ஹிஸ்புல்லாஹ் நடத்திய தாக்குதல்களில் சுமார் 18 ஆண்டுகள் தெற்கு லெபனானில் நிலைகொண்டிருந்த இஸ்ரேல் படைகள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறியிருந்தன. இதையடுத்து, மத்திய கிழக்காசியாவின் பலமிக்க தலைவர்களுள் ஒருவராக ஹசன் நஸ்ரல்லாஹ் மாறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஒரு லீற்றர் டீசலை ரூ. 100இற்கு அரசாங்கத்தால் வழங்கமுடியும்!

## முன்னாள் அமைச்சர் காஞ்சன சொல்கிறார்

கொழும்பு, செப். 29

**ஜனாதிபதி அநுரகுமார வாக்குறுதியை நிறைவேற்றினால் ஒரு லீற்றர் டீசலை 100 ரூபாய்க்கு வழங்க முடியும் என்று முன்னாள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜய சேகர கூறியுள்ளார்.**



எரிபொருள்மீதான வரியை நீக்குவோம் என தற்போதைய அரசாங்கம் தேர்தல் பரப்புரைகளில் கூறியது. இதற்கமைய எரிபொருள் மீதான வரியை நீக்க வேண்டும் என்று கூறிய முன்னாள் அமைச்சர், எதிர்வரும் 30ஆம் திகதி இரவுக்குள் எரிபொருள் விலை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலை கருத்தில் கொண்டு இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் உத்தரவின்பேரில் இடைநிறுத்தப்பட்டிருந்த கடந்த அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னாள் அமைச்சர் அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்தார்.

அத்துடன், ஒக்ரோபர் மாதத்துக்கான மின்சார கட்டணத் திருத்தம் இலங்கை மின்சார சபையின் அதிகாரிகளால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை தாமதமின்றி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதிக்கு அனுப்புமாறும் அரசாங்கத்திடம் விஜயசேகர கோரிக்கை விடுத்தார்.

# மின்னல் தாக்கம் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, செப். 29

மின்னல் தாக்கம் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்றிரவு 11.30 மணி வரை இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, மேல், சப்ரகமுவ, தெற்கு, மத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இன்று ஞாயிற்றுக்கிழமை இடியுடன் கூடிய மழை பெய்யும்வேளை அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள பொதுமக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் - என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# ஹெரோயினுடன் பெண் கைது!

கொழும்பு, செப். 29

முகத்தை அழகுபடுத்தும் கிறீம் பெட்டியில் போதைப் பொருளை மறைத்து வைத்திருந்த பெண்ணை விசேட அதிரடிப் படை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீண்டகாலமாக பொலிஸாரிடமிருந்து தப்பி தலைமறைவாக இருந்த 40 வயது பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 1.3 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

கொழும்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள உலகக்குழுவை சேர்ந்தவர். என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 11,200 சிகரெட்களுடன் பெண்ணொருவர் கைது!

கொழும்பு, செப். 29

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 11 ஆயிரத்து 200 வெளிநாட்டு சிகரெட்களுடன் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று கைது செய்யப்பட்டார்.

மில்லேவ பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அபுதாபியிலிருந்து நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவரிடம் நடத்தப்பட்ட சோதனையில் 11 ஆயிரத்து 200 வெளிநாட்டு சிகரெட்கள் அடங்கிய 56 சிகரெட் காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# இந்த மாதத்தில் 25 நாட்களில் 99,955 சுற்றுலாவிகள் வருகை



கொழும்பு, செப். 29

செப்ரெம்பர் மாதத்தின் முதல் 25 நாட்களில் 99 ஆயிரத்து 955 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலா பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். அங்கிருந்து 21 ஆயிரத்து 607 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

பிரித்தானியாவிலிருந்து 7 ஆயிரத்து 496 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 6 ஆயிரத்து 651 சுற்றுலா பயணிகளும், சீனாவிலிருந்து 6 ஆயிரத்து 640 சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

இதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 14 இலட்சத்து 62 ஆயிரத்து 623 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வடக்கு, கிழக்கு தழுவிய போராட்டம்!

வவுனியா, செப். 29

சர்வதேச சிறுவர் தினமான நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தவுள்ளதாக வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி சி. ஜெனிற்றா தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ளன. இறுதி யுத்தத்தின்போது சிறுவர்கள், பாடசாலை மாண வர்கள் ஷெல் வீச்சுகளாலும் விமான குண்டு தாக்குதல்களாலும் உடல் சிதறிப் படுகொலையாகினர். இதற்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

இறுதி யுத்தம் முடிவடைந்த நிலையில் குடும்பம் குடும்பமாக இடம்பெயர்ந்தவர்கள் தங்களின் பிள்ளைகளை இராணுவத்தின் கையிலே ஒப்படைத்தனர். இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பள்ளி மாணவர்களுக்கும் பச்சிளம் குழந்தைகளுக்கும் என்ன நடந்தது?

சர்வதேச சிறுவர் தினத்தை கொண்டாடுபவர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்கின்றோம். எமது உறவுகள் எத்தனை பச்சிளம் குழந்தைகளையும் பாடசாலை மாணவர்களையும் இழந்து அவர்கள் மீண்டும் வருவார்களா என்ற ஏக்கத்துடனும் தவிப்புடனும் வாழ்கின்றனர். இவர்களை உங்கள் பிள்ளைகளாக நேசியுங்கள்.

சர்வதேச சிறுவர் தினமான ஒக்ரோபர் முதலாம் திகதியன்று வடக்கு, கிழக்கு தழுவி கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தவுள்ளோம். வவுனியாவில் அன்று முற்பகல் 10 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தப் போராட்டங்களில் அனைவரும் பங்கேற்க வேண்டும் - என்றார். (ஐ)

# வாகன இறக்குமதி தடை படிப்படியாக நீக்கப்படும்

## மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, செப். 29

கடந்த அரசாங்கம் வாகன இறக்குமதி தடையை படிப்படியாக நீக்குவதற்கு வழிவகுத்த நிதி நிலைமைகள் அரசாங்க மாற்றத்துக்குப் பின்னரும் மாறாமல் இருக்கி றது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க வலியுறுத்தினார்.

"முந்தைய அரசாங்கம் முடிவெடுத்தபோது, தேவை யான தொழில்நுட்ப பகுப்பாய்வுகளை நடத்திய பின்னர் மத்திய வங்கி பரிந்துரைகளை வழங்கியது." என அவர் கூறினார்.

பெப்ரவரி 1, 2025இற்குள் தனியார் வாகன இறக்கு மதி மீதான கட்டுப்பாடுகளை முழுமையாக தளர்த்துவ தற்கான திட்டங்களை முந்தைய அரசாங்கம் அறிவித்திருந்தது. நிதி நிலைமைகள் எதிர்பார்த்த பாதையில் தொடருமானால், தீர்மானத்தை தக்க வைத்துக் கொள் வது சாத்தியமாகும் என வீரசிங்க குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், வாகன இறக்குமதி தொடர்பான இறுதி முடிவு நிதியமைச்சினுடையது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கிளிநொச்சியிலும் கவனவீர்ப்பு போராட்டம்!

கொழும்பு, செப். 29

சர்வதேச சிறுவர் தினமான நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியிலும் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் கிளிநொச்சி மாவட்ட சங்கம் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவி கலாரஞ்சினி தெரிவித்துள்ளார். (ஐ)

# குழந்தையும் பெண்ணும் வீதி விபத்தில் படுகாயம்!

கொழும்பு, செப். 29

லொறி - ஓட்டோ மோதிய விபத்தில் குழந்தை ஒன்று உட்பட இருவர் படுகாயமடைந்தனர்.

குருநாகல் - ரிதிகம வீதியில் மெஹிஎல்ல பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தின்போது, முச்சக்கரவண்டியில் பயணித்த பெண்ணும் குழந்தையுமே படுகாயமடைந்து குருநாகல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# இராணுவ அதிகாரியின் கார் மோதியதில் ஒருவர் மரணம்!

கொழும்பு, செப். 29

இராணுவ அதிகாரி செலுத்திய கார் மோட்டார் சைக்கிளை மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பு - கண்டி வீதியில் கம்பஹாவின் யக்கல நகருக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், அதே இடத்தைச் சேர்ந்த 29 வயது இளைஞரே உயிரிழந்தார். விபத்தில் காயமடைந்தவர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் அங்கு உயிரிழந்தார்.

காரை செலுத்திய இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.